ௐ

ஹிந்து தர்ம ஞானம்

ஓர் எளிய அறிமுகம்

அஞ்சல்வழி ஓராண்டுச் சான்றிதழ் படிப்பு

2

ஞானத்திற்கு ஈடு ஞாலத்தில் இல்லை

பாரதீய அறநெறிப் பண்பாட்டுக் கல்வி மையம்

திருவண்ணாமலை.

தாய் அமைப்பு :

தர்ம ரக்ஷண ஸமிதி

தமிழ்நாடு





நற்பண்புகளும், நல்லொழுக்கமும் இருக்கும்போது,
ஞானம் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்,
நற்பண்புகளும், நல்லொழுக்கமும் இல்லாவிடிலோ
ஞானத்தை அடையவே முடியாது.
நற்பண்புகளும், நல்லொழுக்கமும் இருந்தால்,
ஞானத்தை அடையலாம்.
“ ஞானத்திற்கு ஈடு ஞாலத்தில் இல்லை ”

பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி

ஹிந்துவே ! எழுந்திரு உன் சமயத்தைப் புரிந்து கொள்.
உன்னுடைய பெருமையை வெளிப்படுத்து.

‘சாஸ்த்ரம்’ என்ற சொல்லுக்கே,
நன்மையை உபதேசித்து, துன்பத்திலிருந்து நம்மைக் காப்பாற்றுவது
என்று தான் பொருள். சாஸ்த்ரங்கள் கண்ணாடியைப் போன்று நம்மை
நமக்குக் காட்டும் ஆற்றல் படைத்தவை. பிறவித் தளைகளிலிருந்து
விடுபட்டு, மனிதன் பேரானந்தத்தை உணரும் வழியை சாஸ்த்ரங்கள் த
நமக்கு உணர்த்துகின்றன.

இதற்காக உருவாக்கப் பெற்றதுதான்
‘ஹிந்து தர்ம ஞானம்’ அஞ்சல் வழிக் கல்வி.

மெய்யன்புடையீர் ! படிப்பீர் ! பயன்பெறுவீர் !
உளங் கனிந்த நல்வாழ்த்துக்கள்.
ஆதி குருவின் அருட்பணியில்,

பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமீ ஓங்காரானந்
தலைவர், தர்ம ரக்ஷண ஸமிதி

ௐ

ஹிந்து தர்ம ஞானம்

அஞ்சல் வழிக் கல்வி

ஓராண்டுச் சான்றிதழ் படிப்பு
பாடப் புத்தகம்

தொகுப்பு
2
வைகாசி

பாரதீய அறநெறிப் பண்பாட்டுக் கல்வி மையம்
திருவண்ணாமலை

தாய் அமைப்பு

தர்ம ரக்ஷண ஸமிதி
தமிழ் நாடு

ௐ

அருளாசி

ஹிந்து தர்மம் என்பது வாழ்க்கையின் குறிக்கோளையும் அதை அடைய வேண்டிய வழியையும் கொண்டது; உண்மையை அடிப்படையாகக் கொண்டது; இந்த அஞ்சல்வழிக் கல்வித் திட்டத்தை வரவேற்று ஆசீர்வதிக்கிறேன். ஹிந்துக்கள் எல்லோரும் இந்தத் திட்டத்தில் இணைந்து ஹிந்துக்களாக இருக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

ஸ்வாமி தயாநந்த ஸரஸ்வதி
நிறுவனர்
தர்ம ரக்ஷண ஸமிதி

''ஞானத்திற்கு ஈடு ஞாலத்தில் இல்லை''
''ந ஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரம் இஹ வித்யதே''

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

அருள் வாழ்த்துரை



ஹிந்து தர்ம ஞானப் பயிற்சித் திட்டத்தில் ஹிந்துக்கள் அவசியம் கலந்துகொள்ள வேண்டுமென்று ''சேரவாரும் செகத்தீரே'' என்ற தாயுமானவரின் அருள்மொழியினைச் சிந்தித்து அன்போடு அனைவரையும் அழைக்கின்றேன்.

இதன் வாயிலாக ஹிந்து தர்ம விஷயங்களை நன்கு அறிந்துகொள்வோம். ஆர்வத்துடன் அவைகளைக் கடைப்பிடிப்போம். அனைவரையும் இதில் ஈடுபடுத்தி நாம் பெற்ற இன்பத்தைப் பிறருக்கும் வழங்குவோம்.

காலத்தை வென்று வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஹிந்து தர்மத்தை எல்லாவிதமான நல்ல முயற்சிகளின் துணைகொண்டு பாதுகாப்போம். உண்மையான மனிதநேயத்தை உலகுக்கு உணர்த்துவதே ஹிந்துமதம் என்பதை நிரூபிப்போம். தெய்வீகமான இந்த பாரதநாட்டை ஹிந்து தர்மத்தின் வாயிலாகப் பாதுகாக்க உறுதி பூணுவோம்.

ஊதுமினோ வெற்றி! ஒலிமினோ வாழ்த்தொலிகள்
ஓதுமினோ வேதங்கள்! ஓங்குமினோ! ஓங்குமினோ!
தீதுசிறி தும்பயிலாச் செம்மணிமா நெறிகண்டோம்;
வேதனைகள் இனிவேண்டா, விடுதலையோ திண்ணமே.

-பாரதியார்

ஸ்வாமி ஓங்காரானந்த

தலைவர், தர்மரக்ஷண ஸமிதி.

ௐ

ஹிந்து தர்ம ஞானம்

பொருளடக்கம்

ௐ

ப்ரார்த்தனைப் பாடல்கள்

1. கு^{3}ரு த்^{4}யாநம்
(குருவை தியானித்தல்)



ஓம் நம: ப்ரணவார்தா^{2}ய ஶுத்^{3}த^{4}ஞானைகமூர்தயே |
நிர்மலாய ப்ரஶாந்தாய த^{3}க்ஷிணா மூர்தயே நம: ||

பதவுரை:

ஓம்	-	ஓம் என்ற மூலகாரணம்
ப்ரணவார்த^{2}ாய	-	ப்ரணவ மந்திரத்தின் மூலப் பொருளுக்கு
ஶுத்^{3}த^{4}க்ஞானைக மூர்தயே	-	தூய ஞானத்தின் வடிவமானவருக்கு
நிர்மலாய	-	எப்பொழுதும் தூய்மையாக விளங்குபவருக்கு
ப்ரஶாந்தாய	-	சாந்த வடிவமானவருக்கு
த^{3}க்ஷிணா மூர்தயே	-	தென்முகக் கடவுளுக்கு
நம:	-	நமஸ்காரம்.

★ ஶ என்ற கிரந்த லிபி - வரிவடிவம் - வரும் இடங்களிலெல்லாம் தமிழில் 'ச' என்ற வரிவடிவம் எனக் கொள்க. 'சிவன்' என்ற சொல்லில் 'சி' எப்படி உச்சரிக்கப்பட வேண்டுமோ அப்படி உச்சரிக்கப்பட வேண்டும்.

பொருள்: ஓம் என்ற மூல காரணமான ப்ரணவ மந்திரத்தின் மூலப்பொருளாகவும், தூய ஞானத்தின் வடிவமானவரும் எப்பொழுதும் தூய்மையாக விளங்கு பவரும் சாந்த வடிவமானவருமான தக்ஷிணாமூர்த்திக்கு (தென்முகக் கடவுளுக்கு) நமஸ்காரம்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமசிவாயவே.

- திருஞான ஸம்பந்தர், தேவாரம்

பொருள்: 'நமசிவாய' எனும் திருவைந்தெழுத்து இறைவனுடைய திருப்பெயராகும். உள்ளத்தில் அன்பு பொங்க, மனம் உருகி கண்களில் கண்ணீர் மல்க 'நமசிவாய' என்று ஓதுபவர்களை நல்ல வழியில் செலுத்தி இறைவனிடத்தில் சேர்ப்பது இம்மந்திரம். நான்கு வேதத்திலும் உண்மைப் பொருளாக விளங்குவது 'நமசிவாய' என்னும் திருவைந்தெழுத்தேயாகும்.

2. ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர் (திருமுருகன்) ஸ்துதி



மயூராதி4ரூட4ம் மஹாவாக்யகூ3ட4ம்
மனோஹாரிதே3ஹம் மஹச்சித்தகே3ஹம் |
மஹீதே3வதே3வம் மஹாவேத3 பா4வம்
மஹாதே3வபா3லம் ப4ஜே லோக பாலம் ||

- ஸ்ரீ ஆதிசங்கரரின் ஸுப்ரஹ்மண்ய புஜங்கம்

பொருள்: மயில் வாஹனராயும், மஹாவாக்யத்தின் பொருளாக விளங்குபவராயும் காண்பவர்கள் மனதைக் காந்தம் போல் கவர்ந்திழுக்கும் தேஹ காந்தியுடன் கூடினவராயும், மஹான்களின் மனதில் குடி கொண்டவ ராயும், எல்லோரும் உபாஸிக்கத் தகுந்தவராயும், வேதங்களின் மஹாதாத்பர்யத்திற்கு விஷயமானவராயும் விளங்குகின்ற பரமேஸ்வரனின் மைந்தனுமாகிய ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யக் கடவுளைப் போற்றுகின்றேன்.

அஞ்சு முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் – நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்

- தனிப்பாடல் (திருமுருகாற்றுப்படை)

பொருள்: மனத்தில் அச்சம் தோன்றுமானால் அச்சம் விலகும் வகையில் ஆறுமுகங்களை உடைய முருகப் பெருமான் தோன்றி அருள்வான்; போர்க்களத்தில், அஞ்சாமல் முனைந்து போரிடும் வகையில் அவனுடைய வேற்படை தோன்றி ஊக்கம் தரும். 'முருகா' என்று எப்போதும் ஓதுபவர்கள், மனத்தில் ஒருமுறை அவனை நினைத்தால் அவன் இரு திருவடிகளும் தோன்றி அருள்தரும்.



३. ஸ்ரீ லக்ஷ்மீ ஸ்துதி
(திருவேட்கை)



நமஸ்தேஸ்து மஹாமாயே ஸ்ரீபீடே² ஸுரபூஜிதே |
ஶங்க² சக்ரக³த³ாஹஸ்தே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே ||

பதவுரை:

மஹாமாயே	-	ஸகல சக்திகளை உடையவளே
ஸ்ரீபீடே²	-	செல்வங்களின் இருப்பிடமே
ஸுரபூஜிதே	-	தேவர்களால் வழிபடப்படுபவளே!
தே	-	உனக்கு
நம:	-	நமஸ்காரம்
ஶங்க² சக்ர க³த³ாஹஸ்தே	-	சங்கையும் சக்கரத்தையும் கதையையும் கையில் கொண்டவளே!
மஹாலக்ஷ்மீ	-	ஐஶ்வர்யங்களின் நாயகியே
தே	-	உனக்கு
நம:	-	நமஸ்காரம்
அஸ்து	-	உரித்தாகட்டும்

பொருள்: ஸகல சக்திகளை உடையவளே, செல்வங்களின் இருப்பிடமே, தேவர்களால் வழிபடப்படுபவளே, சங்கையும் சக்கரத்தையும் கதையையும் கையில் கொண்டவளே! ஐஶ்வர்யங்களின் நாயகியே, உனக்கு நமஸ்காரம் உரித்தாகட்டும்.

மலரின் மேவு திருவே – உன்மேல்
மையல் பொங்கி நின்றேன்
நிலவு செய்யு முகமும் – காண்போர்
நினை வழிக்கும் விழியும்
கலகலென்ற மொழியும் – தெய்வக்
களி துலங்கு நகையும்
இலகு செல்வ வடிவும் – கண்முன்
இன்பம் வேண்டு கின்றேன்.

– மஹாகவி பாரதியார்

பொருள்: செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் லக்ஷ்மி தேவியே! உன் மேல் காதல் மயக்கம் கொண்டு நிற்கின்றேன். நிலவு போன்ற முகமும், பார்ப்பவர்களின் நினைவை அழிக்கக் கூடிய கண்களும், கலகலென்ற பேச்சும், தெய்வப் புன்னகையும் கொண்ட செல்வத் திருவுருவே! உன்னைக் கண்டு நான் இன்பமே வேண்டுகின்றேன்.

மானிடப் பிறவி அரிதானது. விவேக உணர்வுடன் இருப்பது, தர்ம வழியில் நடப்பது, உண்மையை அறிவது, ஆன்மாவையும் அது அல்லாததையும் பிரித்து அறிவது, முக்தி போன்றவை பல கோடிப் பிறவிகளில் செய்த புண்ணியம் இல்லாமல் அடைய இயலாது.

– ஸ்ரீ ஆதிசங்கரர்

1. அன்னை பூமி பாரதம்
(மாத்ருத்வம்)

உலகில் பரிணாம வளர்ச்சியை உற்று நோக்கும் போது மனித ஸமுதாயத்தில் மட்டுமே உறவுகளும் அதற்கு ஆதாரமான உணர்வுகளும் ஆழமாக வேரூன்றியுள்ளன. மற்ற உயிரினங்களிடத்து இத்தகைய உணர்வுகள் வளர வாய்ப்பில்லை.

பறவை உலகம் - தாய் சேய் உறவு:

பறவை ஒன்று முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கிறது; பின்னர் அக்குஞ்சுப்பறவை தாய்ப்பறவையினிடத்து பாசம் வைத்திருப்பது அத்தாய்ப்பறவை இரை தேடித் தரும் வரைதான்; அதுபோலவே தாய்ப் பறவைக்கும் தனது குஞ்சு என்ற உறவு, அக்குஞ்சுப் பறவை சிறகு முளைத்து, சிறகடித்துப் பறந்து சென்று இரை தேடும் வரைதான். அக்குறிப்பிட்ட பருவத்திற்குப் பின்னர் தாய் - குஞ்சு என்ற உறவுமுறை பறவை உலகத்தில் இல்லை.

விலங்கு உலகம் - தாய் சேய் உறவு:

நாய், பூனை, ஆடு, மாடு போன்ற விலங்குகள் தங்கள் குட்டிகள் தங்களிடத்தில் பால் குடிக்கும் பருவம்வரை பாசவுணர்வு கொண்டுள்ளன. தாய்ப்பசு தன் கன்று என்ற அடையாளம் கண்டு கொள்வதும் - அது தன்னிடத்தில் பால் குடிக்கும் வரைதான். அதுபோல கன்றிற்கும் தனது தாய் என்ற உணர்வு அப்பசுவினத்தில் பால் குடிக்கும் வரைதான் உள்ளது. பால் குடிக்கும் பருவத்திற்கு மேலே இவ்வுறவுகள் அர்த்தமற்றவையாகி விடுகின்றன.

இந்த தாய் - சேய் உறவு முறை ஒன்றைத் தவிர வேறு உறவு முறைகள் பறவை உலகிற்கும், விலங்கு உலகிற்கும் இல்லை.

தாயில்லாமல் நானில்லை:

பறவை, விலங்கினத்தை விட மனிதப் பிறவியை எல்லோரும் உயர்ந்த பிறவியாகக் கருதுகின்றனர். சான்றோர்கள் பெறுதற்கரிய பிறவியாகவே மனிதப் பிறவியைச் சொல்லுகின்றனர்.

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பது **ஔவையார்** வாக்கு.

ஆறறிவு பெற்ற மனித இனத்திடம் தான். தாயினிடத்து பால் குடிப்பதை நிறுத்திப் பல ஆண்டுகளுக்குப் பின்னாலும் **'தாய்'** என்கிற ஆழமான உணர்வு போவதில்லை.

அதற்கு மிக முக்கியமான காரணம் உண்டு.

மனித இனத்தில் மட்டும் பறவையினத்தைப் போல, விலங்கினத்தைப் போல குழந்தை பிறந்த சில தினங்கள் அல்லது மாதங்களுக்குள்ளாகவே ஸ்வதந்திரமாக வாழ முடிவதில்லை.

குழந்தை பிறந்து அதனைப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்து, பின் அது கவிழ்ந்து, தவழ்ந்து, அமர்ந்து, தளிர் நடைபயில்வதற்கு பல மாதங்கள் ஆகின்றன; பின்னர் நடந்து தானே உணவு உண்டு, மொழி பயின்று பேசி வாழ்வதற்கு இன்னும் பல ஆண்டுகள் ஆகின்றன. அதுவரை, நம்மை நம் தாயும் தந்தையும் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். குறிப்பாகத் தன்னை வருத்திக்

கொண்டு குழந்தையை வாழ வைக்கும் தாயின் ஸேவைக்கு ஈரேழு உலகத்தில் எதைக் கொடுத்தாலும் ஈடாகாது. அதனால்தான் வேதம் முதலில் **'மாத்ரு தேவோ பவ'** என்று மொழிகின்றது. தமிழ் வேதமும் **'தாயிற் சிறந்த கோயிலுமில்லை'** என்று இயம்புகின்றது.

மனித ஸமுதாயம் முழுவதிலும் தன்னை ஈன்றெடுத்த தாயை மதிக்கின்ற மனோபாவம் இயல்பானதாக அமைந்துள்ளது. இந்த மனோபாவம்தான் பார்க்கின்ற அனைத்தையும் தாயாகக் காணும்படி நம்மைச் செய்கின்றது.

பாரத நாட்டில் மட்டும்தான் தன்னை ஈன்றெடுத்த பெண்ணை மட்டும் தாயாகப் பார்க்காமல் உலகிலுள்ள

ஸ்வாமி விவேகானந்தர் அவர்கள் மேற்கத்திய நாட்டில் ஆற்றிய உரை ஒன்றில்: -

''உங்கள் நாட்டின் பண்பாட்டிற்கும் எங்கள் நாட்டின் பண்பாட்டிற்கும் ஒரு சிறு வித்தியாசமே உள்ளது. But it makes all the difference.'

''உங்கள் நாட்டின் ஆடவர்கள் தன்னை ஈன்றெடுத்த தாயைத் தவிர மற்ற எல்லாப் பெண்களையும் மனைவிகளாகப் (போகப் பொருளாக) பார்க்கின்றனர்.''

''ஆனால் எங்கள் நாட்டின் ஆடவர்கள் தனது சொந்த மனைவியைத் தவிர மற்ற எல்லாப் பெண்களையும் தாயாகப் பார்க்கின்றனர். இது நம் அணுகுமுறையிலேயே அடிப்படையான மாற்றத்தை உண்டு பண்ணுகிறது''

என்று கூறினார்.

மற்ற பெண்களையும் தாயாகப் பார்க்கும் கண்ணோட்டம் இயல்பாக இருக்கிறது.

இதனாலேயேதான் நம் பண்பாடு மற்ற எல்லாப் பண்பாடுகளையும் விட உயர்வானதாகக் கருதப் படுகிறது.

தாய்ப்பாலில்லாத போது தாய்ப்பாலுக்கு நிகரான தன் பாலைக் கொடுத்து வளர்க்கும் பசுத்தாய் ஹிந்துக்களால் புனிதமாகப் போற்றி வணங்கப்படுகிறது. அதனால்தான் மஹாத்மா காந்தியடிகள் பசுவதை தடைச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்றார்.

போலிப் பகுத்தறிவினால் பார்த்தால் நதியைத் தாயாகப் பார்ப்பது பைத்தியக்காரச் செயலாகத் தோன்றும்; ஆனால் உணர்வு பூர்வமாகப் பகுத்தறிவினால் பார்த்தால் நதி தாயாகிறது. இந்த ஹிந்து உணர்வு நாடெங்கும் விரவி நிற்கிறது. அதனால்தான் தமிழகத்தில் உள்ள நாத்திகக் கூட்டமும்கூட **'காவிரித் தாய்'** என்று நதியைப் புகழ்வதைப் பார்க்கிறோம். ஒருபடி மேலே போய் காவிரித் தாய்க்குச் சிலை எடுப்பதையும் பார்க்க முடிகிறது.

விஞ்ஞான ரீதியாக மட்டுமே சிந்தித்துச் செயல்படும் உலகில் எந்தவிதமான உறவு முறைகளுக்கும் இடமிருக்க முடியாது. ஆன்மிக உணர்வுகள் நம் ரத்தத்தோடு கலந்து போய்விட்டதால்தான் தமிழகத்தின் போலிப் பகுத்தறிவு வாதிகள் **தமிழ்த்தாய்** என்றும் **காவிரித்தாய்** என்றும் மொழியையும் நதியையும் தாயாக உருவகப்படுத்தி அழைத்தனர். தமிழ்த்தாய்க்கும் சிலை அமைக்கின்றர். **பாஷா ரூபிணி, வாக்தேவி** என்று அம்பாளைப் போற்றுகின்ற தன்மைதான் மொழியைத் தாயாகப் பார்க்க வைத்தது.

ஆன்மிக உணர்வுகள் இல்லாத வேறு எந்த நாட்டவரும் தங்கள் மொழியையும் நதிகளையும் தாயாகப் பார்ப்ப தில்லை.

அதர்வண வேதத்தில்.....

பூமியை வெறும் பூப்பிரதேசமாக, நிலமாகப் பார்க்காமல் பூமித்தாயாக (பூமாதேவி) பார்க்கும் மனோபாவம் தொன்றுதொட்டு ஹிந்துக்களாகிய நம்மிடம் இருந்து வந்துள்ளது.

''பூமித்தாயே! உன்னை அகழ்ந்து உழும்போது ஏற்படும் பள்ளங்கள் யாவும் உடனடியாக நிறைமேடு களாகட்டும்.

உன் உதரத்து உதித்த நான் உனக்கு எவ்வித ஊறும் செய்யாமல் இருப்பேனாக. உன் உள்ளத்தில் வேதனையை ஏற்படுத்தாமல் நான் வாழ்வேனாக.

ஒரு ராஷ்ட்ரம் (தாய்நாடு) என்பது என்ன?

அது வெறும் ஒரு நிலத்துண்டு அல்ல; வெறும் அலங்கார வார்த்தை அல்ல; மனதின் கற்பனை அல்ல. பவானி மஹிஷாஸுர மர்த்தினி எங்ஙனம் முப்பத்து முக்கோடி தேவர்களின் ஒருங்கிணைந்த சக்தியாக வெளிப்பட்டாளோ, அங்ஙனம் நமது நிலப்பரப்பில் வாழும் கோடிக்கணக்கான ஹிந்துக்களின் ஒருங்கிணைந்த சக்தியே பாரதத்தாய்.

- மஹரிஷி அரவிந்தர்.

இந்திர தேவன் இந்த பூமியை எதிரிகளிடமிருந்து காத்து வருகிறான். பூமித்தாயே! எங்களை வாழ்விக்கும் வளத்தினை எங்களுக்கு அருள்வாயாக! உன் மடியில் பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடட்டும்.''

எனவேதான் எல்லாவற்றையும் தாயாகக் காண்கின்ற மனோபாவத்தை நம் ஹிந்து தர்மம் கற்றுக் கொடுக்கிறது.

(ஆர்.பி.வி.எஸ். மணியன் அவர்கள் எழுதிய **'புண்ணிய பூமி பாரதம்'** என்னும் நூலிலிருந்து பெரும்பாலான கருத்துக்கள் இங்கு எடுத்தாளப் பட்டுள்ளன.)

● மரணத்திற்கு மூன்று வாசல்கள் - காமம், பேராசை, நாக்கைக் கட்டுப்படுத்தாமல் இருத்தல். இந்த மூன்றும் நேராக ஒருவனை மரணத்தை நோக்கி அழைத்துச் செல்கின்றன.

● சிரத்தையும் பக்தியும் தியான யோகமும் முக்திக்குக் காரணங்களாக வேதம் கூறுகிறது. யார் இவைகளில் நிலைப்பெற்றிருக்கிறானோ அவனுக்கு அவித்தையால் கற்பிக்கப்பட்ட உடலாகிய தளையிலிருந்து விடுதலை ஏற்படுகிறது.

● போகத்தால் அல்ல, அறிவினால் அல்ல, கர்மத்தால் அல்ல, கல்வியால் அல்ல; பிரம்மமும் தானும் ஒன்று என்ற விழிப்புணர்வால்தான் முக்தி சித்திக்கிறது; வேறு வகையில் இல்லை.

- ஸ்ரீ ஆதிசங்கரர்

2. எங்கள் தந்தையர் நாடு
(பிதுரார்ஜிதம்)

ஸ்ரீ ஆதிசங்கரர்

புண்ணிய புருஷரும் கீர்த்தி பெற்ற சிறந்த ஆன்மிகக் குருவுமான ஆதிசங்கரர் கேரள மாநிலத்தில் காலடி (ஆலவாய் ரயில் நிலையத்திலிருந்து ஆறு மைல் தூரம்) என்னும் கிராமத்தில் பிறந்தார். தாயார் பெயர் **ஆர்யாம்பாள்.** தந்தையார் பெயர் **சிவகுரு.**

சங்கரர் நந்தன வருஷம் வைகாசி மாதம் சுக்ல பஞ்சமியில் புனர்வஸு நக்ஷத்திரத்தில் ஞாயிற்றுக்கிழமை பிறந்தார்.

ஒரு ஸமயம் பூர்ணா நதியில் குளிக்கும் போது, முதலை காலைப் பிடிக்க, அதிலிருந்து மீள அன்னையிடம் துறவறத்திற்கு அனுமதி வேண்டினார். துறவறம் ஏற்றால் முதலை காலை விட்டு விடும் என்று சொன்னபடியே, அன்னை அனுமதியளிக்க, அதிலிருந்து விடுபட்டு ஸந்நியாசியானார்.

நர்மதா நதிக்கரையில் வாழ்ந்து வந்த ஸ்ரீ கோவிந்த பகவத்பாதரிடம் சாஸ்திரங்களைக் கற்று உபதேசம் பெற்றார். சங்கரரின் பரமகுரு கௌடபாதர்; குரு கோவிந்த பகவத்பாதர்.

முப்பத்திரண்டு (32) வயதிற்குள் பாரத தேசம் முழுவதையும் மூன்று முறை வலம் வந்து நம் ஹிந்து ஸமுதாயத்திற்கு மூவாயிரம் (3000) ஆண்டுகளுக்குத் தேவையானவற்றைச் செய்து சென்றிருக்கிறார்.

'பிரம்மமும் ஜீவனும் ஒன்றே' என்கிற அத்வைத ஸித்தாந்தத்தை உலகுக்கு பிரகடனப்படுத்தினார். நம் ஹிந்து தர்ம சாஸ்திரக் கல்வியை கற்பிக்கும் மையங்களும் தர்ம பீடங்களுமான நான்கு மடங்களை நிறுவினார். அவைகளை பாரதத்தின் நான்கு திசைகளிலும் அமைத்தார்

திசை	இடம்	பெயர்	வேதம்	முதல் ஆச்சார்யர்
கிழக்கு	ஜகந்நாத் பூரி	கோவர்த்தன பீடம்	ரிக்வேதம்	பத்மபாதர்
தெற்கு	சிருங்கேரி	சாரதா பீடம்	யஜூர் வேதம்	ஸுரேஶ்வரர்
மேற்கு	துவாரகா	துவாரகா பீடம்	ஸாமவேதம்	ஹஸ்தாமலகர்
வடக்கு	பத்ரிநாத்	ஜ்யோதிர் பீடம் (ஜ்யோஷி மடம்)	அதர்வணம்	தோடகர்

பாரத தேசத்தின் ஒருமைப்பாட்டிற்கு நம் முன்னோர்கள் செய்த ஏற்பாட்டினை எண்ணிப் பெருமைப்பட வேண்டாமா!

ஸ்ரீ ஆதி சங்கரரின் நான்கு சிஷ்யர்களான **பத்மபாதர், ஸுரேஶ்வரர், ஹஸ்தாமலகர், தோடகர்** ஆகியோர் ஆச்சார்யர்களாக இந்த நான்கு மடங்களிலும் முறையே அமர்த்தப்பட்டனர். மண்டனமிசிரரே பின்னாளில் ஸுரேஷ்வராசாரியர் ஆனார்.

உபநிஷதங்கள், பிரஹ்ம ஸூத்ரங்கள், ஸ்ரீமத் பகவத் கீதை ஆகியவற்றிற்கு எழுதிய விரிவுரைகளின் மூலம் ஆதிசங்கரர், வேதாந்த இலக்கியங்களுக்கும், போதனைக்கான ஶாஸ்திர ஸம்ப்ரதாயத்திற்கும் பெரிய சேவையைச் செய்திருக்கிறார்.

'சங்கர ஜயந்தி' வைசாக என்று சொல்லப்படும் வைகாசி மாதத்தில் வளர்பிறையான சுக்ல பக்ஷத்தில் ஐந்தாவது தினத்தில் ஸம்பவிக்கிறது.

அவரின் ஜயந்தியை நாம் கொண்டாடி அவர் அருளைப் பெற்று உய்வோமாக!

மேலை நாட்டவர்க்கு ஆதிசங்கரரை அறிமுகப் படுத்துகிற போது ஸஹோதரி நிவேதிதை கூறியுள்ளதைக் காண்போம்:

''மேலை நாட்டினராகிய நமக்கு ஆதி சங்கரர் போன்ற ஓர் அரிய மஹானின் பெருமையை எண்ணிப் பார்ப்பது கூட கடினம்.

நாம், கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்த **எபலார்டு** (Abelard) அவர்களின் அறிவுத் திறனையும், **மார்டின்லூதர்** அவர்களின் விடுதலை வேட்கையையும் வீர்யம் மிக்க ஆற்றலையும் **இக்னேஷியஸ் லயோலா** அவர்களின் அரசியல் நுண்ணுணர்வையும் அஸிஸியைச் சார்ந்த **புனித ஃப்ரான்ஸிஸ்** அவர்களின் பக்தியையும் மிகவும் மகிழ்ச்சியோடும் ஆச்சரியத்தோடும் நினைத்துப் பார்க்கிறோம்.

ஆனால் இவ்வத்தனை குணங்களும் ஒரு சேரப் பெற்ற ஓர் அரிய ஞானியை நம்மாலே கற்பனை செய்து பார்க்க முடியுமென்றால் அவர் தான் ஆதிசங்கரர்.''

இதை விட யாராலும் ஆதிசங்கரரின் அருங்குணங் களை இத்தனை அழகாக சித்தரிக்கவே முடியாது.

தன்னுள்ளே உறைந்து நிற்கும் தெய்வீகத் தன்மையை முழுவதும் வெளிக் கொணர்ந்து செயற்கரிய செயல்கள் பல புரிந்து இறைவனோடு இரண்டறக் கலந்த முழுமனிதர்தான் **ஆதிசங்கரர்.**

சங்கரரின் காலம்:

ஆசார்யர் சங்கரரின் காலம் கி.மு. 500ஐ ஒட்டியது என்பதை த்வாரகா பீடம், பூரி பீடம், ஜ்யோஷி பீடம், ச்ருங்கேரி பீடம், காஞ்சி பீடம் ஆகியவை ஏற்றுக் கொண்டுள்ளன.

சங்கரர் வாழ்ந்தது கி.மு.509க்கும் கி.மு. 477க்கும் இடைப்பட்ட காலத்தில்தான் என்பது நிரூபணமாகிறது. அதிலும் சங்கரரது பிறப்பை கி.மு.509ல் நிகழ்ந்ததாகவே காட்டியுள்ளார்கள்.

சங்கரர் வாழ்ந்த காலச் சூழ்நிலை:

சங்கரர் பிறந்தபோது பாரத நாடு ஓர் இருண்ட காலக் கட்டத்தைக் கடந்து கொண்டிருந்தது. அரசியல் ரீதியாக, ஸமுதாய ரீதியாக நாடு பல பகுதிகளாகச் சிதறுண்டும், ஸம்பிரதாயங்கள் புற்றீசல்கள் போல பல்கிப் பெருகியும் மக்களை ஆன்மிகப் பாதையில் செல்ல முடியாதபடி தடுத்து வந்தன.

சங்கரர் பிறந்த காலகட்டத்தில் ஏறத்தாழ எழுபத்திரண்டு (72) துர்மதங்கள் இருந்தன என்ற தகவல் தரப்பட்டுள்ளது.

அப்போதைய பாரதத்தின் நிலை எப்படி இருந்தது என்றால் **பூரணமான வைதிக (வேத) மதம்** அதாவது

நம் **ஸநாதந தர்மம்** மிகவும் குறைவுபட்டுப் போயிருந்தது.

அஞ்ஞான இருளில் ஆழ்ந்து கிடந்த ஸமுதாயத்தில் ஞான ஒளி ஏற்றுவித்த யுகபுருஷர் தான் ஆதிசங்கரர்.

சங்கரரின் அவதார ஸ்தலம்:

ஆதிசங்கரரின் ஜன்மஸ்தலம் காலடியில் அவர் பிறந்த வீட்டை, நமக்குப் பெற்றுத்தந்த பெருமை ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடத்தின் 33வது பீடாதிபதியாக விளங்கிய ஸ்ரீ **சச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதி** ஸ்வாமிகளையே சாரும். 1910ஆம் ஆண்டு பிப்ரவரி 21ஆம் தேதி காலடி க்ஷேத்திரத்தில் ஸ்ரீ சங்கரர் ஆலயம், ஸ்ரீ சாரதா ஆலயம் ஆகியவற்றின் கும்பாபிஷேகங்கள் முறைப்படி ஸ்ரீ சச்சிதாநந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதி ஸ்வாமிகளின் பொற்கரங்களால் திவ்யமாக நடந்தேறின. இந்தக் கும்பாபிஷேகத்தின் நூற்றாண்டு விழாவும் 2010ஆம் ஆண்டு மே மாதத்தில் தற்போதைய **சிருங்கேரி பீட மஹா ஸன்னிதானம் ஸ்ரீ பாரதி தீர்த்த ஸ்வாமிகளின்** முன்னிலையில் நடந்தேறியுள்ளது.

சங்கரரின் முதல் படைப்பு:

சங்கரரது ஆன்மிகப் படைப்பு இலக்கியங்களின் முதலாவதான **'கனகதாரா ஸ்தவம்'** என்ற ஸ்ரீ மஹாலக்ஷ்மியை பிரார்த்தித்துப் பாடிய பாடல் ஸமுதாய அக்கறை கொள்ள வேண்டியதன் அவசியத்தையே காட்டுகிறது.

ஏழை பெண்மணியின் கண்ணீர் தாரை கண்டு மனம் பொறாமல் சங்கரர் கவிதை மழை பொழிய அதனால் மனம் இளகிய மஹாலக்ஷ்மி கனகதாரையைக் கொட்டி விட்டாள். அதனாலேயே இந்த ஸ்தோத்திரத்திற்கு **கனகதாரா ஸ்தோத்ரம்** என்றே பெயர் நிலைத்து விட்டது.

தள்ளாத வயதில் ஸ்நாநம் செய்ய தாய்க்காக சங்கரர் பூர்ணநதியை தம்வீட்டுக் கொல்லைப் புறத்திலேயே திருப்பி விட்டார்.

ஒருவர் பிறந்த குலத்தையும் அவரது தோற்றத்தையும் கொண்டு ஒருவரை எடை போடக்கூடாது. அவரது ஞானத்தைக் கொண்டே அவரை மதிப்பிடவேண்டும் என்பதை விளக்க வந்த ஸ்தோத்திரம் தான் சங்கரர் அருளிய '**மநீஷா பஞ்சகம்**'.

வியாசர் அருளிய பிரம்ம ஸூத்திரத்திற்கு முதன் முதலில் பாஷ்யம் செய்தவர் சங்கரர்.

எட்டு வயதில் ஊர் அறியாச் சிறுவனாக வீட்டைவிட்டு வெளியேறிய சங்கரர், தாயின் அந்திம நேரத்தில் வந்து சேர்ந்து தாயின் ஆசையைப் பூர்த்தி செய்தார்.

சங்கரர் செய்த புரட்சிகள்:

வேதத்தின் அடிப்படையில் அமைந்த பல்வேறு இஷ்ட தெய்வ வழிபாடுகளை எல்லாம் ஒன்றுபடுத்தி ஆறு மையங்களை மிகவும் பலமான அஸ்திவாரத்தில் அமைத்தார். அதனால் அவரை **ஷண்மத ஸ்தாபனாசாரியர்** என்று புகழ்கிறோம்.

ஈஸ்வரன், அம்பாள், விஷ்ணு, கணேசர், ஸூர்யன் ஆகிய ஐந்து தெய்வங்களின் மூர்த்தங்களை வைத்து பூஜிப்பதே **'பஞ்சாயதன பூஜை'** ஆகும். இதனை ஏற்படுத்திக் கொடுத்த பெருமை ஸ்ரீ சங்கரருக்கே உரித்தானது.

ஒவ்வொரு தெய்வத்திற்கும் முழுமையான உருவம் கொடுத்துப் பூஜை செய்வது கூட சிரமமாகி விடுமோ என்று அருஉருவமாக சில கற்களை ஒவ்வொரு தெய்வ உருவத்திற்கும் அவரே தேர்ந்தெடுத்து அவற்றை ஒரு சிறு சம்புடத்திலேயே (மூடிய பாத்திரம்) வைத்து எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் சென்று பூஜை செய்ய எளிமையான முறையை ஏற்படுத்தினார். அப்படிச் சில கற்களைத் தேர்ந்து எடுத்ததில் பாரதத்தின் தேசிய ஒருமைப்பாட்டினை வெளிப்படும்படிச் செய்தார்.

1. விஷ்ணு மூர்த்தம்	ஸாளக்ராமம்	கண்டகி நதி, நேபாளம்
2. அம்பாள் மூர்த்தம்	ஸ்வர்ணரேகா சிலா	ஸ்வர்ணமுகி நதி, ஆந்திரம்
3. விநாயக மூர்த்தம்	ஸோன பத்ரம்	ஸோனபத்ரா நதி, பாட்னா (பாடலிபுத்திரம்), பீஹார்
4. சிவன் மூர்த்தம்	பாணலிங்கம்	நர்மதை நதி
5. ஸூர்ய மூர்த்தம்	ஸ்படிகம்	பரவலாகக் கிடைப்பது

சங்கரர் செய்த இன்னொரு அருஞ்செயல் கும்ப மேளாவை சமயங்களின் ஒருங்கிணைப்பு மாநாடாக நடத்தும்படிச் செய்தது.

சங்கரர் ஏற்படுத்திய **தசநாமி ஸம்பிரதாயங்களைச்** சேர்ந்த துறவிகள் எல்லோரும் கும்பமேளாவில் கூடுவர்.

தேசத்தின் நான்கு மூலைகளில் நான்கு மடங்களை நிறுவிய சங்கரர் நிறைவாக தாமே ஒரு மடத்தைக் காஞ்சிபுரத்தில் நிறுவினார்.

சங்கரர் தமது பாரத திக் விஜய யாத்திரையை கேதாரத்தில் நிறைவு செய்தார். அன்று ஏகாதசி தினம், ரக்தாக்ஷி வருஷம்; வைகாச சுக்ல ஏகாதசி நாளையே விதேஹ முக்தி அடைய தேர்ந்தெடுத்திருந்தார்.

சங்கரர் நிறைவாக செய்தது தான் **ஸோபான பஞ்சகம்** என்று அழைக்கப்படுகிற **உபதேச பஞ்சகம்**. ஐந்து ஶ்லோகங்களில் உபதேசம் செய்தருளினார்.



ஶ்ருதி ஸ்மிருதி புராணானாம்
ஆலயம் கருணாலயம் |
நமாமி ப⁴கவத் பாத³ம்
ஶங்கரம் லோக சங்கரம் ||

பொருள்: ஶ்ருதி ஸ்மிருதி புராணங்களின் ஆலயமாய் விளங்குபவரும் கருணையின் ஆலயமானவரும் வையகத்திற்கு நன்மை செய்பவருமான பகவத்பாத சங்கரரை வணங்குகிறேன்.

ஸ்ரீ சங்கரர்

ஸ்வாமி விவேகானந்தர்

மகத்தான சங்கரர் தோன்றினார். பதினாறு வயதிற்குள் அந்த பிராமண இளைஞர் தமது நூல்கள் அனைத்தையும் எழுதி முடித்ததாகக் கூறப்படுகிறது. அந்தப் பதினாறு வயது இளைஞரின் எழுத்துக்கள் இன்றைய நவீன உலகின் விந்தைகளாக உள்ளன. அந்த இளைஞரும் அதுபோலவே ஆச்சரியமானவர். பாரதத்தின் அப்பழுக்கற்ற தூய்மையை மீண்டும் கொண்டுவர அவர் விரும்பினார். அது அவ்வளவு சாதாரணமா என்ன! சற்று எண்ணிப்பாருங்கள்.

வேதாந்தத்தின் மாபெரும் ஆச்சாரியர் சங்கரர். அவர் ஆழ்ந்த தர்க்க அறிவின் மூலம் வேதங்களிலிருந்து வேதாந்த உண்மைகளைப் பிரித்தெடுத்தார். அதனை அடிப்படையாகக் கொண்டு ஞானநெறியை வகுத்தார். அதனைத் தமது விளக்கவுரைகளின் வாயிலாகப் போதித்தார். பிரம்மத்தைப் பற்றிக் கூறப்படுகின்ற முரண்பட்ட விளக்கங்கள் அனைத்தையும் ஒன்றுபடுத்தி, **இருப்பதெல்லாம் எல்லையற்ற உண்மை ஒன்றே** என்பதைக் காட்டினார். மனிதன்

துறவிகள் தாங்கள் மேற்கொள்ளும் ஸந்நியாஸ தீக்ஷா நாமத்தின் இறுதியில் ஏதாவது ஒரு பெயரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்படிப் பத்து நாமங்களை சங்கரர் வழங்கியிருக்கிறார். அவை வருமாறு:

1. ஸரஸ்வதி 2. பாரதி 3. புரி 4. தீர்த்தர் 5. ஆச்ரமி 6. கிரி 7. பர்வத 8. ஸாகர 9. வன 10. ஆரண்ய

முன்னேற்றப் பாதையில் மெதுவாகச் செல்லும் போது, பல்வேறு தகுதிகளுக்கு ஏற்ப பல்வேறு நிலைகள் தேவையே என்பதைத் தெளிவாக்கினார்.

ஆதிசங்கரர் தோன்றி வேதாந்தத் தத்துவத்திற்கு மீண்டும் புத்துயிர் ஊட்டினார். அதைப் பகுத்தறிவுக்கு ஏற்புடைய ஒரு தத்துவமாகச் செய்தார். உபநிஷதங்களில் உள்ள வாதங்கள் பல இடங்களில் சரியாகப் புரிவதில்லை. புத்தர் இந்தத் தத்துவத்தின் அறநெறிப் பகுதியையும், சங்கரர் அறிவுப் பகுதியையும் வற்புறுத்தினார்கள். சங்கரர் அத்வைதத்தின் அற்புதமான, கோவையான முறையை நன்கு ஆராய்ந்து, அறிவுப் பூர்வமாக மாற்றி மக்களுக்குக் கொடுத்தார்.

சாஸ்திரங்களைப் புறக்கணிக்காமலேயே முக்திக்கு வழிகாட்டியது சங்கரர் சாதித்த அருஞ்செயலாகும்.

ஸ்ரீ சங்கரரின் ப்ரச்னோத்தர மாலிகா

(வினாவிடை மாலை)

1. **உண்மையான மனிதனின் உடனடி கடமை என்ன?**
   தொடர்ந்து வருகின்ற பிறவிச் சங்கிலியை வெட்டி இனி பிறவாமை தேடுவது.

2. **உண்மையான அறிஞன் யார்?**
   எது நல்லது, எது கெட்டது என்பதைப் பிரித்தறிகின்ற விவேகம் உள்ளவன்.

3. எது விஷம்?
பெரியவர்களின் அறிவுரைகளை மீறி நடப்பது.

4. வாழ்க்கையில் கற்க வேண்டிய முக்கியப் பாடம் எது?
வாழ்க்கை நிலையற்றது; கண நேரத்திற்கே என்பதை உணர்வது.

5. ஒருவனைப் பிறர் மதிக்கச் செய்வது எது?
எதற்காகவும் யாரிடமும் கையேற்காதவனை எல்லோரும் மதிப்பார்கள்.

6. லட்சிய வாழ்க்கை எது?
விமர்சனங்களைக் கடந்த வாழ்க்கை.

7. தாமரை இலைத் தண்ணீர்போல் நிலையற்றது எது?
வாலிபம், செல்வம், ஆயுள்.

8. எது நாசம்?
பிறருக்கு ஏவல் செய்து வாழ்தல்.

9. எது இன்பம்?
எதிலும் பற்றின்றி வாழ்வது.

10. எது மரணம்?
அறியாமையில் வாழ்தல்.

11. எதற்காக முயற்சிக்க வேண்டும்?
நல்ல கல்வி, நல்ல மருத்துவச் சிகிச்சை, பிறருக்குக் கொடுக்கும் பழக்கம்.

12. எது மேலானது?
துன்பப்படுபவர்களுக்காக இரங்குவது, நல்லவர்களிடம் நட்புக்கொள்வது.

13. யார் உலகை வெல்லக்கூடும்?
உண்மையும் பொறுமையும் உடையவன்.

14. தேவர்களும் யாரை வணங்குவார்கள்?
கருணை நிறைந்தவனை.

15. யார் ஊமை?
வேண்டிய நேரத்தில் இனிமையாகப் பேசத் தெரியாதவன்.

16. உண்மையான அழகு எது?
அப்பழுக்கற்ற நடத்தை.

17. அரியவை எவை?

1. இனிய வார்த்தைகளுடன் ஒருவருக்கு ஒன்றைக் கொடுத்தல்;
2. ஆணவம் இல்லாத அறிவு;
3. மன்னிக்கும் தன்மையுடன் கூடிய வீரம்;
4. தர்ம சிந்தையுடன் சேர்க்கின்ற செல்வம்.

18. திருமகள் யாரிடம் வருவாள்?
அயராத உழைப்பும், நியாயமான வாழ்க்கையும் உடையவனிடம்.

19. எல்லா நல்ல குணங்களையும் அழிப்பது எது?
பேராசை.

20. எந்த சபையைத் தவிர்க்க வேண்டும்?
நல்லவர்களும் அனுபவம் மிக்கவர்களும் இல்லாத சபையை.

21. எந்த படை ஒருவனைக் காக்கும்?
சொந்த தைரியம் என்னும் படை.

22. எது அழிவைத் தரும்?
சோம்பல் மிக்கதும், கட்டுப்படாததுமான மனம்.

23. எது வெற்றி தரும்?
ஒருமுகப்பட்ட முயற்சி.

24. யார் பெரியவர்?
தர்மத்தின் ஸாரத்தை அறிந்தவர்.

25. வாழ்க்கையில் உயர்பவன் யார்?
உண்மையான பணிவு உடையவன்.

26. பெரிய பேறு எது?
நல்ல உடல்நிலை.

27. மிகவும் கடினமானது எது?
மனத்தை எப்போதும் கட்டுப்பாட்டில் வைப்பது.

28. உண்மையான தலைவன் யார்?
பயந்தவர்களுக்கு அபயம் அளிப்பவன்.

29. எது சுகம்?
திருப்தியுற்ற நிலை.

3. ஹிந்து ஞானக் களஞ்சியம்
(குருவாசகம்)

நமக்கு எத்தனை கடவுள்கள்?

- பூஜ்ய ஸ்ரீ தயானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள்

மற்ற மதத்தினர் நம் மதத்தினரைப் பார்த்து 'உங்களுக்குப் பல கடவுள்கள்' என்று பரிகாசம் செய்கிறார்கள். 'எங்களைப் பாருங்கள், நாங்கள் ஒரே ஒரு கடவுளை மட்டுமே வழிபடுகிறோம். ஆதலால், நீங்களும் எங்களைப் போல் ஒரே ஒரு கடவுளை மட்டுமே வழிபட வேண்டும்' என்று கூறுகிறார்கள். (இதையும் நம்மில் சிலர் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பது பரிதாபத்திற்கு உரியது.)

'ஒரு கடவுள் மட்டுமே' என்பது மற்றவர்கள் கூறுவது: நாம் கூறுவதோ **'இருப்பதெல்லாம் இறைவன் மட்டுமே'**

நமது சாஸ்திரம் பல கடவுள்கள் இருப்பதாகவும் கூறவில்லை. ஒரே ஒரு கடவுள் ஸ்வர்க்கத்தில் இருக்கிறார் என்றும் கூறவில்லை. இருப்பதெல்லாம் இறைவன் மட்டுமே என்று முழங்குகிறது.

ஒரே ஒரு கடவுள்; அவர் ஸ்வர்க்கத்தில் இருக்கிறார் என்றால், அனைத்துமே அவரிடமிருந்து வேறாகி விடும். அப்பொழுது கொசு, மூட்டைப்பூச்சி, ஈ, பேன் இவை எல்லாம் அவரிடமிருந்து வேறானவை என்பதால், அவை அவரை வாட்டி எடுக்கும். அப்பொழுது அவரும் அடிக்கடி மெடிகல் லீவில் போக வேண்டி வரும். அவர் விடுப்பு

எடுத்துவிட்டால், சூரியன் உதிக்காமல் போகலாம், புவி ஈர்ப்பு சக்தி வேலை செய்யாமல், திடீரென மனிதர்கள் பறக்க ஆரம்பிக்கலாம். அவரிடமிருந்து அனைத்தும் தனித்து நிற்கின்றன என்றால், அவர் சக்திமானாக இருக்கலாம்; ஆனால், ஸர்வ சக்திமானாக, அனைத்து சக்தியும் உடையவராக இருக்க முடியாது. ஏனெனில், அவருடைய பலம், சக்தியிலிருந்து நம்முடைய சக்தி, மிருகங்கள், பறவைகள், கொசு போன்ற பூச்சிகள் இவற்றின் சக்தி வேறுபட்டு நிற்கும். கொசு மிகுந்த சக்தி வாய்ந்தது என்று நான் நினைக்கிறேன். ஏனெனில், ஒரு மிருகத்தையோ, பறவையையோ, மீனையோ பிடிக்க வேண்டும் என்றால், நாம் அவற்றுக்கு வலை வீசுகிறோம், அல்லது பொறி வைக்கிறோம். ஆனால், கொசு விஷயத்தில் அப்படியல்ல, அதற்கு பயந்து நாமல்லவா வலைக்குள் புகுந்து கொள்கிறோம்!

ஸர்வ சக்திமான் என்றால், அவர் அனைத்து சக்தியையும், அனைத்து வித சக்திகளையும் உடையவராக இருக்க வேண்டும். ஆதலால், அவருக்கென்று ஒரு தனி உடல் இருக்கிறது; ஆனால் அவர் அனைத்து சக்திகளையும் படைத்தவர் என்று கூற முடியாது. இந்தக் கூற்றுகள் சிறு பிள்ளைத்தனமானவை. இவற்றில் உள்ள அசட்டுத் தனத்தை நாம் காணவேண்டும். ஆதலால், இவ்வாறு கூறும் மதங்கள் நமக்குப் பயனற்றவை, தேவையுமில்லை.

அவர்கள் எங்களுக்கு 'ஒரு கடவுள் மட்டுமே' என்று கூறுகிறார்கள். ஆனால் நாமோ பல கடவுள்கள் இருப்பதாகவும் கூறவில்லை. ஒரு கடவுள் இருப்பதாகவும்

கூறவில்லை. 'இருப்பதெல்லாம் இறைவன் மட்டுமே' என்பது தான் நாம் கூறுவது.

They say "We have one God. We say "There is only God.'

இந்த வித்தியாசம் ஒரு சிறிய வித்தியாசம் இல்லை. இது மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்! இன்னும் சொல்லப்போனால், இது உண்மைக்கும் உண்மை யற்றதற்கும் உள்ள வித்தியாசம். ஆதலால், இந்த வேறுபாட்டை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். **'இருப்பதெல்லாம் இறைவன் மட்டுமே.'** அதில் நம் ஒவ்வொருவருடைய உடல், மனம், இந்த்ரியங்களின் சேர்க்கையும் அடங்கியுள்ளது. இதுதான் உண்மை.

உதாரணம் மட்டுமே உண்மையை நிலை நாட்டி விடாது.

என் வாழ்க்கையில் நடந்த ஓர் உண்மையான சம்பவத்தைச் சொல்கிறேன். ஒரு முறை நான் ப்ரஹ்மசாரியாக இருக்கும்பொழுது டில்லியிலிருந்து சென்னைக்கு ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தேன். அந்தத் தடுப்புக்குள் என்னைத் தவிர இன்னும் மூன்று பேர் இருந்தார்கள். நான் ஜன்னலோரம் அமர்ந்திருந்தேன். என் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர் பகவத்கீதை ஹிந்தி உரையைப் படித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரம் கழித்து எதிரே உட்கார்ந்திருந்த மனிதர் அவரிடம் பேசத் துவங்கினார்.

'நீங்கள் என்ன படிக்கிறீர்கள்?'

'பகவத் கீதை'

'கீதை என்பது என்ன?'

'அது எங்கள் மதநூல்.'

'அதை யார் தந்தது?'

'ஸ்ரீ கிருஷ்ணர்.'

'ஸ்ரீ கிருஷ்ணர் யார்?'

'அவர் எங்கள் கடவுள்.'

'அப்பொழுது ராமர்?'

'அவரும் எங்கள் கடவுள்.'

'சிவன்?'

'அவரும் கடவுள்தான்.'

'நாராயணர் என்பார்களே?'

'அவரும் கடவுள்தான்.'

'அப்பொழுது முருகன், பிள்ளையார் முதலியவர்கள்?'

'எல்லோருமே கடவுள்கள்தாம்.'

'உங்களுக்கு எத்தனை கடவுள்கள்?'

'பல கடவுள்கள்.'

(இதற்குமேல் இவருக்குப் பதிலளிக்கத் தெரியவில்லை.)

'உங்களுக்கு குழப்பம் ஏற்படுவதில்லையா?'

'இல்லையே! என்னுடைய பூஜையறையில் எல்லோருடைய படங்களையும் வைத்திருக்கிறேன். எல்லோருக்கும் கர்ப்பூர ஆரத்தி காட்டி வணங்குகிறேனே! எனக்கு எவ்விதமான குழப்பமும் இல்லையே.'

'கட்டாயம் குழப்பம் இருக்க வேண்டுமே!'

'இல்லை, ஒரு வித குழப்பமும் இல்லை.'

'நிச்சயமாக குழப்பம் இருக்கவேண்டும்' என்று அவர் வற்புறுத்திக் கொண்டிருந்தார். 'நான் ஒரு சம்பவம் சொல்கிறேன், கேளுங்கள்.'

அவர் ஒரு கதை சொல்லத் துவங்கினார். இவ்வாறான வேலையை அவர் பல முறை செய்திருக்க வேண்டும் என்றே தோன்றியது. ஏனெனில், அவர் ஒரு கிறிஸ்துவ மிஷனரி,

அவர் சொன்ன கதை பின் வருமாறு -

இரண்டு பேர்கள் சேர்ந்து பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் ஹிந்து, மற்றவர் கிறிஸ்தவர். வழியில் ஒரு பெரிய ஆறு குறுக்கிட்டது. இருவருக்குமே நீந்தத் தெரியாது. ஆனால், அதிருஷ்ட வசமாக முழங்கால் அளவு நீரே இருந்தது. ஆதலால், அவர்கள் ஆற்றை நடந்தே கடக்கத் துவங்கினார்கள். அப்பொழுது பார்த்து நதியின் மேல் மட்டத்தில் இருந்த அணை உடைத்துக் கொண்டது. திடீரென ஒரே வெள்ளம். நீர் மட்டமோ முழங்காலளவிலிருந்து, தொடையளவு, இடுப்பளவு, மார்பளவு, கழுத்தளவு என்று வேகமாக ஏறத் துவங்கியது. தாங்கள் மூழ்கி விடுவோமோ என்று பயந்தார்கள்.

அப்பொழுது அவர்களில் ஹிந்துவானவன் 'ராமா, என்னைக் காப்பாற்று' என்று பிரார்த்தனை செய்தான். ராமர் அதைக்கேட்டு ஓடோடி வந்தார். ஆனால், அவர் வருவதற்கு முன் பொறுமை இழந்து, 'கிருஷ்ணா, என்னைக் காப்பாற்று' என்று ஓலமிட்டான். கிருஷ்ணர்

வருவதற்கு முன் அவன் 'சிவனே, நீயும் என்னைத் தவிக்க விடுகிறாயா?' என்று கதறினான். அவனைக் காப்பாற்ற வந்து கொண்டிருந்த ராமர், அவன் கிருஷ்ணரைக் கூப்பிடுவதைக் கேட்டுத் தன்னிடத்திற்குத் திரும்பி விட்டார். அவ்வாறே கிருஷ்ணரும் சிவன் பெயரைக் கேட்டு அவர் தன்னைக் கூப்பிடவில்லை என்று எண்ணித் திரும்பி விட்டார். அவர் 'ராமா, கிருஷ்ணா, சிவனே, பிள்ளையாரப்பா, முருகா, அம்பிகே' என்று ஒவ்வொருவரையாகக் கூப்பிட்டுக் கொண்டிருந்தான். ஒவ்வொருவரும் மற்றவர் பெயரைக் கேட்டுவிட்டு, தன்னைக் கூப்பிடவில்லை என்று திரும்பி விட்டார்கள். இவ்வாறு எவருடைய உதவியும் இல்லாமல் அவன் மூழ்கி இறந்து விட்டான்.

'ஆனால்' என்று இழுத்து அவர் ஓர் அர்த்தமுள்ள இடைவெளி கொடுத்தார். 'ஆனால்' அந்தக் கிறிஸ்தவனோ, 'ஏசு கிறிஸ்துவே, என்னைக் காப்பாற்றும்' என்று பிரார்த்தனை செய்தான். உடனே அங்கு ஒரு மரக்கட்டை மிதந்து வந்தது. 'ஏசுவே நன்றி' என்று கூறி, அதைப் பிடித்துக் கொண்டு அவன் கரையேறி விட்டான். (ஹிந்துவை மூழ்க விட்டுவிட்டு) ஒரே ஒரு கடவுளை நம்பியதால், கிறிஸ்தவன் காப்பாற்றப்பட்டான். ஆனால், ஹிந்துவோ பல கடவுள்களை நம்பியதால், குழப்பம் ஏற்பட்டு, கடைசியில் எவருமே அவனைக் காப்பாற்றாமல் இறந்து விட்டான்.

இவ்வாறு சொல்லிவிட்டு அவர் சுற்றி இருப்பவர்களை 'இதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்?' என்பதுபோல் பெருமிதத்துடன் பார்த்தார். கீதை படித்துக்

கொண்டிருந்தவருக்கு பதிலேதும் சொல்லத் தெரியவில்லை. அவருக்குதான் இந்தக் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தார் என்றாலும், அவர் அவ்வப்பொழுது ஓரக்கண்ணால் என்னையும் பார்த்துக் கொண்டிருந்தார். இப்பொழுதோ நேரிடையாகவே என்னை வெற்றிப் பார்வையுடன் பார்த்துப் புன்னகை செய்தார். நானும் அவரைப் பார்த்துப் புன்னகை செய்து விட்டு, 'ஆஹா, இந்தக் கதை மிக சுவாரசியமாக இருக்கிறதே!' என்றேன். என்னுடைய வெள்ளை வேஷ்டி, தாடி போன்ற ப்ரஹ்மசாரி வேஷம் அவர் கவனத்தை இழுத்திருக்க வேண்டும். என்னை மாட்டுவதுதான் அவருடைய முக்கிய நோக்கம். ஆதலால், இப்பொழுது அவர் எனக்கு நேராக வந்து அமர்ந்து கொண்டார். 'பல கடவுள்கள் இருப்பதால் எவ்வளவு குழப்பம்? பாருங்கள்' என்றார்.

குதர்க்கத்திற்குப் பதில் குதர்க்கம்தான்:

'இந்தச் சம்பவம் எப்பொழுது நடந்தது?' என்று அவரைக் கேட்டேன். அவராகவே அதைக் கற்பனை செய்து கூறி இருந்ததால், பதில் சொல்லத் தடுமாறினார்.

'சரி, ஒரு மார்ச் மாதம் பதினைந்தாம் தேதி வெள்ளிக்கிழமை அன்று மாலை நான்கு மணிக்கு நடந்ததாக வைத்துக் கொள்வோம். நீங்கள் வேறு ஏதாவது நேரம் சொன்னால், அதுவும் எனக்குச் சரியே' என்றேன்.

'சரி, மேலே சொல்லுங்கள்' என்றார்.

'உலகத்தில் எவ்வளவு கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்?'

'கோடிக்கணக்கானவர்கள்.'

''சரி, இப்பொழுது இந்த நேரத்தில் லண்டன் தெரு ஒன்றில் நடந்து கொண்டிருந்த ஒருவரை வேகமாக வந்த கார் ஒன்று இடித்துத் தள்ளிவிட்டுச் செல்கிறது. ரத்த வெள்ளத்தில் மிதக்கும் அவர், 'ஏசுவே என்னைக் காப்பாற்றும்' என்று கதறினார். இதே நேரத்தில் பாரிஸ் நகரத் தெருவில் ஒருவர் கத்தியால் குத்தப்படுகிறார். அவரும் 'ஏசுவே என்னைக் காப்பாற்றும்' என்று கதறுகிறார். இதே நேரத்தில் தென்னாப்பிரிக்க ஜோஹன்ஸ்பர்க் நகரத்தில் மெடர்னிடி வார்டில் பிரசவ வலியில் துடிக்கும் ஒரு பெண்மணி, 'ஏசுவே என்னைக் காப்பாற்றும்' என்று கதறுகிறார். இந்தியாவிலோ இந்தக் கிறிஸ்தவர் வெள்ளத்தில் மூழ்கும் தருவாயில் 'ஏசுவே என்னைக் காப்பாற்றும்' என்று கதறுகிறார். இப்போது சொல்லுங்கள், ஏசு எங்கு செல்வார். ஒருவரைக் காப்பாற்றச் சென்றால், மற்றவர்கள் உதவி இன்றி இறந்து விடுவார்கள். அது பாரபட்சம் காட்டுவதாகும்.

ஆனால், வெள்ளத்தில் மூழ்கும் ஹிந்துவைக் காப்பாற்ற வேலன் வந்தால், காரில் அடிபட்டவனை கிருஷ்ணர் காப்பாற்ற விரைவார். பாரிஸில் இருப்பவரைப் பரமசிவன் காப்பாற்றுவார். பிரசவ வலியில் தவிக்கும் அம்மணியை அம்பிகை காப்பாற்றுவாள். இவ்வாறு பல பேர்களைக் காப்பாற்றுவதற்குப் பல கடவுள்கள் இருப்பது எவ்வளவு நல்ல விஷயம்! ஒரே ஒரு கடவுள் மட்டுமே இருந்தால், அவர் யாரை என்று காப்பாற்றுவார்?''

இதற்குப் பதில் சொல்ல முடியாத சங்கடத்தில் இருந்த அவரை அவருடைய ஏசு கிறிஸ்து காப்பாற்றி விட்டார்.

ஏனெனில் அப்பொழுது பார்த்து ட்ரெயின் ஒரு ஸ்டேஷனில் நின்றது. அவர் 'எக்ஸ்க்யூஸ் மீ' என்று சொல்லி விட்டு இறங்கிவிட்டார். அவ்வளவுதான், அதற்கப்புறம் அவரைக் காணோம்.

நான் அவரிடம் கூறியது நியாயமானது, தர்க்க ரீதியாகச் சரியானது என்று கூற முடியாது. ஆனால், அவர் சொன்னதும் தர்க்க நீதியாக சரியானது அல்ல. ஆதலால், ஒரு குதர்க்கத்திற்கு மற்றொரு குதர்க்கம் தான் பதில் கூற வேண்டும். அதுவும் அதிக குதர்க்கமானதாக இருக்கவேண்டும்.

கிருஷ்ணா என்று கூப்பிட்டாலும் சரி, கிறிஸ்துவே என்று கூப்பிட்டாலும் சரி, இறைவன் நம்முடைய பிரார்த்தனைக்குச் செவி சாய்ப்பார். மேலும் அவர் நம்மைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தால், அதற்கு நேரமாகுமா என்ன? அவர் வந்து கொண்டே இருந்தார் என்று சொல்வது எவ்வளவு அசட்டுத் தனமானது?நமக்கு எத்தனை கடவுள்கள் இருந்தாலும் பிரச்சினை இல்லை. ஏனெனில், ஒவ்வொரு வடிவமும் அவருடைய பல்வேறு வடிவங்களில் ஒன்று. எல்லாமே அவருடைய வடிவங்கள் என்னும்போது அவரை நாம் எந்த வடிவத்தில் வேண்டுமானாலும் வழிபடலாம். ஆதலால், நமக்குப் பல கடவுள்களோ, ஒரு கடவுளோ இல்லை. **'இருப்பதெல்லாம் கடவுள் மட்டுமே'** இதுதான் உண்மை.

நமக்குப் பலவிதமான வழிபாட்டு முறைகள் இருப்பதற்கு அடிப்படையாக உள்ளது இறைவனைப் பற்றி நமக்கு இருக்கும் இந்த திருஷ்டியே ஆகும். இதை

நாம் புரிந்து கொள்ளவேண்டும். இறைவனே தவறாத நிலையுடைய இந்த நியதிகள் வடிவில் இருக்கிறார். இந்த நியதிகள் தவறாதவை என்ற பூரண நம்பிக்கையோடு நாம் நிம்மதி கொள்ளலாம். ஆதலால், இறைவனிடம் நமக்கு இருக்கும் நம்பிக்கை, விச்வாசம், பூரணமானதாக உள்ளது. இறைவனை இந்த நியதிகளின் வடிவில் காணும்போது, நாம் ஒருபொழுதும் அவரிடமிருந்து விலகி இருக்க முடியாது. தனி மனிதர்களான நாம் முழுப் பொருளுடன் எப்பொழுதும் தொடர்புடையவராக இருக்கிறோம். இந்த அறிவில், இந்த உறவில் நாம் நம்முடைய இயலாமை உணர்விலிருந்து விடுபடலாம்.

நமக்கும், இறைவனுக்கும் இருக்கும் இந்த உறவைப் புரிந்து கொள்வதே நம்மை பக்தர்களாக்குகிறது.

- சொற்களின் கூட்டம் ஒரு பெரிய காடு போன்றது, அது மனத்தை மயக்கிவிடும். ஆகையால் உண்மையை நாடுபவர்கள் ஆன்மாவைப் பற்றிய உண்மை ஒன்றையே நன்முயற்சியால் அறியவேண்டும்.

- நான் அழியாதவன், என்னை அழிக்க முடியாது. நான் ஈசுவரன், உயிருக்கு உயிராகியவன். நான் ஒப்பில்லா ஆனந்தம் நிறைந்தவன். நான் அளவிலடங்காதவன்.

- ஸ்ரீ ஆதிசங்கரர்

4. ஹிந்து கடவுள்கள்

(ஈப்ஶ்வர தத்துவம்)

இறைவன் இருக்கின்றானா?

அண்ணா : வாங்க வாங்க தம்பிகளா! தங்கைகளா! சென்ற மாதம் நாம் சிந்தனை செய்ததை மேலும் தொடர்வோமா!

தாமரை : அதற்குத்தான் அண்ணா வந்திருக்கிறோம்.

அண்ணா : 'சங்கரா' தொலைக்காட்சியில் பேச வேண்டும் என்று சொல்லியிருந்தீர்களே! என்னவாயிற்று?

முருகன் : ஒரு மாதம் தள்ளி வைத்திருக்கிறார்கள்.

விவேக் : ஆமாம் அண்ணா! அதுவும் ஒரு விதத்தில் நல்லதாகப் போயிற்று.

வித்யா : அண்ணாவிடமிருந்து நிறைய விஷயங்களை இப்போதே சேகரித்து எழுதி வைத்துக் கொள்ளலாம் அல்லவா!

அண்ணா : எழுதி வைப்பது சரிதான்! அதைவிட முக்கியம் நாம் பேசுவதை புரிந்து கொண்டு மனதில் பதித்துக் கொள்வதுதான்.

முருகன் : ஆமாம் அண்ணா! சென்றமுறை சரஸ்வதி படம், செல் ஃபோன் ஆகிய இரண்டு பொருள்களின் மூலம் கடவுளின் இருப்பை புரிய வைத்தீர்கள். அதிலிருந்து இன்னும் நாம் சிந்திப்போம் அண்ணா!

அண்ணா : 'தோட்ட வேலை' நீங்களெல்லாம் செய்வதுண்டா?

விவேக் : பள்ளியிலும் கல்லூரியிலும் இப்போதெல்லாம் 'Project' என்று எழுத்து வேலைதான் அதிகம் இருக்கிறது அண்ணா!

வித்யா : எங்கள் வித்யாலயாவில் தோட்டம் இருக்கிறது. ஆனால் எங்களுக்கு எதுவும் வேலை இல்லை. தோட்டக்காரர் இருக்கிறார். அவர் செடிகளையும் மரங்களையும் பராமரித்து வருகிறார்.

அண்ணா : என் தம்பி தங்கைகளே! நாம் படிக்கும் இடத்தில் தோட்டப் பயிற்சி இருக்கிறதோ இல்லையோ, நம் வீட்டில் நாம் சில செடி கொடிகளைப் பயிரிட வேண்டும்.

தாமரை : சரி அண்ணா! அதற்கும் நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிற விஷயத்திற்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா?

அண்ணா : நிச்சயமாக. அதற்குத்தான் சொல்ல வந்தேன். தக்காளி, வெண்டை, அவரை

விதைகளை நாம் விதைக்கிறோம். சில தினங்களில் தக்காளிச் செடியும், வெண்டைச் செடியும், அவரைச் செடியும் முளைத்திருக்கும் அல்லவா!

விவேக் : அதில் என்ன ஸந்தேகம்?

வித்யா : நீர் ஊற்றவில்லையென்றால் வளராது.

முருகன் : ஸூர்ய வெளிச்சமும் தேவை.

அண்ணா : ஓ! நன்றாக விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்கிறீர்களே. அது இருக்கட்டும், ஒரு விதை மண்ணில் விதைக்கப்பட்ட சில தினங்களில் முளைக்கிறது; பின் வளர்கிறது அல்லவா!

தாமரை : சில செடிகள் மட்டும் போய்விடுகின்றனவே அண்ணா!

அண்ணா : சரியாகச் சொன்னாய்! பல ஆண்டுகள் வாழ்கின்ற மரங்களும் உண்டு; சீக்கிரமாகவே பட்டுப் போகின்ற செடி கொடிகளும் உண்டு.

வித்யா : ஆமாம் ஆமாம்.

அண்ணா : ஒரு செடிக்கு எப்படி தோன்றுதல், வளர்தல், மறைதல் உண்டோ அப்படித் தான் உலகில் உள்ள எல்லாப் பொருள்களுக்கும்.

விவேக் : ஆமாம் அண்ணா! நேற்று என் நண்பன் செல்லமாக வளர்த்த நாய்க்குட்டி

சோனியாவும் இறந்து விட்டது என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான்.

தாமரை : என் பாட்டியும் இரண்டு மாதங்களுக்கு முன் இறந்து விட்டார்கள்.

வித்யா : உலகத்தில் உள்ள உயிர்ப் பொருள்கள் உயிரில்லாப் பொருள்கள் எல்லாம் தோன்றல், வளர்தல், மறைதல் என்ற மூன்று நிலையினையும் அடைகின்றன.

அண்ணா : தோன்றும், வளரும் (இருக்கும்), அழியும் என்ற இந்த மாறுதல்களைச் செய்பவர் தான் கடவுள்.

உலகத்தில் தாவரங்களும், விலங்குகளும் மனிதர்களும் தோன்றி, வளர்ந்து, வாழ்ந்து மடிவது இயற்கையே.

விவேக் : இது பஞ்சபூதங்களின் சேர்க்கையினால் நிகழ்கிறது அல்லவா, அண்ணா?

முருகன் : ‘பஞ்சபூதங்கள்’ என்பது என்ன?

அண்ணா : நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் இந்த ஐந்தும் தான் பஞ்சபூதங்கள்.

வித்யா : ‘ப்ருத்வீ’ என்றால்...

அண்ணா : ஸம்ஸ்கிருதத்தில்

1. ப்ருத்வீ - நிலம்,

2. அப்பு (ஆப:) - நீர்,

3. தேயு - தீ(ஒளி),

4. வாயு - காற்று (வளி),

5. ஆகாசம் - ஆகாயம் (வெளி) என்று முறையே சொல்கிறார்கள்.

விவேக் : இயற்கை என்றால் என்ன?

வித்யா : இயல்பாக இருப்பது - இருந்தபடியே இருப்பது - இயற்கை எனலாம்.

அண்ணா : அப்படியானால் ஒரு பொருள் எப்படித் தோன்றிற்றோ அப்படியே இருக்க வேண்டும் அல்லவா. அப்பொழுதுதான் இயற்கை என்று சொல்லலாம். மாற்றம் அடைகின்ற பொழுது அதனைச் செயற்கை என்று தானே சொல்லவேண்டும், என்ன முருகா?

முருகன் : அண்ணா! நாங்கள்தான் கேள்வி கேட்போம், நீங்களே எங்களைக் கேள்வி கேட்டால் என்ன செய்வது?

தாமரை : அண்ணா! மாறுதல்களைச் செய்வது பஞ்சபூதங்களே.

வித்யா : பஞ்சபூதங்கள் தாம் கடவுளா?

விவேக் : பஞ்சபூதங்களும் அறிவில்லாத பொருள்கள்தானே அண்ணா!

அண்ணா : பஞ்சபூதங்கள் தாமே இயங்கவும் ஒரு செயலைச் செய்யவும் மாட்டா; ஆகையினால் மாற்றத்திற்குப் பின்னால் அறிவும் ஸ்வதந்திரமும் உடைய ஒருவன் இருக்கவேண்டும். உங்களுக்கு எல்லாம் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை பாடல் ஒன்றைப் பாடிக் காட்டுகிறேன். அப்பாடலை மனப்பாடம் செய்து கொள்வது மிகவும் நல்லது.

ஸூரியன் வருவது யாராலே?
சந்திரன் திரிவதும் எவராலே?
காரிருள் வானில் மின்மினி போல்
கண்ணில் படுவன அவை என்ன?
பேரிடி மின்னல் எதனாலே?
பெருமழை பெய்வதும் எவராலே?
யாரிதற்கெல்லாம் அதிகாரி?
அதை நாம் எண்ணிட வேண்டாவோ?

தண்ணீர் விழுந்ததும் விதையின்றி
தரையில் முளைத்திடும் புல் ஏது?
மண்ணில் போட்டது விதையொன்று
மரஞ்செடி யாவது யாராலே?
கண்ணில் தெரியா சிசுவையெல்லாம்
கருவில் வளர்ப்பது யார் வேலை?
எண்ணிப் பார்த்தால் இதற்கெல்லாம்
ஏதோ ஒரு விசை இருக்குதன்றோ?

- நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

உலக முதல்வன் ஒருவன் உண்டு; அவன் பேரறிவாளன், அவனைப் பற்றின சிந்தனையை அடுத்தமாதம் தொடர்வோமா? எனக்கு 'தர்ம ரக்ஷண ஸமிதி'யின் பணிகள் நிறைய இருக்கின்றன.

தாமரை : சரி அண்ணா! நாங்கள் அடுத்த மாத கலந்துரையாடலுக்கு ஆவலோடு காத்திருப்போம்.

அண்ணா : எனக்காக ஒரு உதவி செய்ய வேண்டும் செய்வீர்களா?

நால்வரும் சேர்ந்து : கட்டாயம் செய்வோம் அண்ணா!

அண்ணா : திருக்குறளில் 'கடவுள் வாழ்த்து' அதிகாரத்தில் அமைந்துள்ள பத்து குறட்பாக்களையும் மனப்பாடம் செய்து வரவேண்டும்.

நால்வரும் சேர்ந்து : மனப்பாடம் செய்து விடுவோம் அண்ணா!

● நான் ரிஷி; ரிஷிகணங்களெல்லாம் நானே. சிருஷ்டியும் நான், சிருஷ்டிக்கப்படுவதும் நான். செல்வத்தின் நிறைவும், வளர்ச்சியும் நான். திருப்தியும் திருப்தியாகிய தீபத்தின் ஒளியும் நான்.

- ஸ்ரீ ஆதிசங்கரர்

திருக்குறள்

பாயிர இயல் - முதல் அதிகாரம்

கடவுள் வாழ்த்து

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

2. கற்றதனால் ஆய பயன்என்கொல் வால்அறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

3. மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

4. வேண்டுதல்வேண் டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

9. கோள்இல் பொறியிற் குணம்இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

5. ஹிந்து வாழ்வியல்
(ஜீவன த்ருஷ்டி)

உணவின் மீது நம் அணுகுமுறை

எல்லா உயிரினங்களின் ஆரோக்கியத்திற்கும், தொடர்ந்து உயிர் வாழ்வதற்கும் உணவு ஓர் அடிப்படையான தேவையாகும். உடல் வளர்ச்சிக்கும் நலத்திற்கும் அத்தியாவசியமான தேவையாக இருப்பதோடு மட்டு மல்லாமல், உணவானது மனிதர்களுக்கு உணர்ச்சிகளின் ஒரு முக்கியமான தேவையையும் பூர்த்தி செய்கிறது.

ஒருவருடைய அடிப்படையான தேவைகளில் முதலிடம் பெறுவது உணவாகும். எண்ணங்கள் நலமுற அமைவதற்கும் அதன்வழி சொல்லும் செயலும் நல்லவிதமாக அமைவதற்கும் உணவு ஒரு முக்கிய காரணியாகும்.

உணவுப் பொருட்களைப் பெறுகின்ற விதம், அவற்றை சமைக்கின்ற விதம், சமைத்த உணவை உண்ணுகின்ற விதம் ஆகிய அனைத்துமே நம் முன்னோர்களால் புனிதமாகக் கருதப்படுகிறது. அதனால் ஹிந்துக்கள் உணவின் மீது கொண்டிருக்கின்ற மனப்பான்மை தெய்வீகமானது.

உணவை **'அன்னபூரணி'**யாக வணங்குவது நம் மரபு.

உணவானது தாவரங்களிலிருந்து பெறப்படுகிறது. உணவிலிருந்து மனிதன் பிறக்கின்றான் என்று தைத்திரீய உபநிஷத் கூறுகிறது. தாவரங்கள்தான் உணவின்

அடிப்படை மூலமாகும். புலாலை உண்பவர்களுக்கும் அவர்கள் உண்ணும் பிராணிகளுக்கான உணவின் மூலப் பொருளாகத் தாவரங்கள் இருக்கின்றன. உணவின் ஸாராம்சத்திலிருந்து மனிதர்களாகிய நாம் பிறக்கிறோம்.

உற்பத்தி செய்யக்கூடிய நம்முடைய ஆற்றல், உயிரணுக்கள், அதன் வளர்ச்சி யாவும் உணவிலிருந்து பெறப்பட்ட சக்தியால்தான் ஏற்படுகின்றன.

அடிப்படையாக உணவின் விளைவே நம் உடம்பாகும். அதனால் அது **''அன்ன மயம்''**. உணவில்லாவிட்டால் உடல், மனதின் ஆற்றல்களைச் சரியாகச் செயல்படுத்த முடியாது.

மரணத்திற்குப் பின்னும் உடலானது தொடர்ந்து திரும்பவரும் உணவுச் சுழற்சியில் ஒரு பங்காக ஆகி மற்ற உயிர் வடிவங்களுக்கு உணவாக உபயோகப்படுகிறது.

இப்படிப்பட்ட அருமருந்தாம் உணவை நம் முன்னோர்கள் இறைவனாகப் போற்றி வழிபட்டனர்.

''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' எனவும்

''தானத்தில் சிறந்தது அன்னதானம்'' எனவும்

பலப்பல வகைகளில் அன்னத்தைச் சிறப்பித்தனர்.

''வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு

வாழும் மனிதர்க் கெல்லாம்...''

- என்றார் **மஹாகவி பாரதியார்.**

'தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று சினந்து ஆர்ப்பரித்தார் **மஹாகவி பாரதி**. அந்த அளவிற்கு பசித்தோர் முகம் பார்த்து உணவிடல் முக்கியமாகிறது.

அடியார்க்கு அமுது செய்வித்தல் சமயக் கடமைகளில் முதலாவதாகவும் புனிதமானதாகவும் கருதப்படுகிறது.

''உணவைத் தாழ்வாகப் பார்க்கக்கூடாது; உணவை இகழக் கூடாது; உணவில் தவறைக் கண்டு பிடிக்கக்கூடாது'' என்று தைத்ரீய உபநிஷதம் மொழிகின்றது. உயிரின் வாழ்வாதாரமாம் உணவிற்கு உரிய மரியாதை அளிக்கப்பட வேண்டும்.

நிவேதன மஹிமை:

ஹிந்து தர்மத்தில் உணவு பிரஸாதமாக இறைவனிட மிருந்து கிடைக்கப்படுவதாகப் பார்க்கப்படுகிறது. இறைவனின் நாமாக்களைச் சொல்லிக் கொண்டே சமைப்பதும், அப்படிச் சமைத்த உணவை இறைவனுக்கு நிவேதனமாக அளித்துப் பின் உண்பதும் நம் பண்பாகும்.

இறைவனுக்கான நைவேத்தியம் என்பதை மனதில் கொண்டு தூய்மையாகவும், மகிழ்ச்சியாகவும், பக்திச் சிரத்தையுடனும் உணவு தயாரிக்கப்படுகிறது. சமைப்பதற்கு முன் வீட்டிலுள்ள பெண்மணி நீராடிவிட்டு அடுப்பைச் சுத்தம் செய்வது வழக்கம். உணவை இறைவனுக்குப் படைக்கும்வரை அது ருசி பார்க்கப்படுவதில்லை.

நாம் சமைத்தால் அது சாதம்; இறைவனுக்குப் படைத்தபின்னர் அது ப்ரஸாதம். இந்த அடிப்படையைப் புரிந்து கொள்வதால், உணவானது குடும்பத்தினரால் நன்றி உணர்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

உணவை நாம் சாப்பிடுவதற்கு முன் காக்கைக்கு இடுகின்ற வழக்கம் உண்டு. யாராவது அதிதிகள் வந்தால் (நாள் குறிப்பிடாமல் வருபவர்களை அதிதிகள் என்போம்) அவர்களுக்கு உணவிட்டு பின் சாப்பிடும் வழக்கம் நம் நாட்டில் எல்லா இடங்களிலும் எல்லா மக்களுக்கும் உண்டு.

வள்ளுவர் காட்டும் விருந்தோம்பல் நெறி:

'விருந்தோம்பல்' என்றே வள்ளுவர் பெருந்தகையார் தலைப்பிட்டு பத்துக் குறட்பாக்களைத் தந்துள்ளார். அவற்றில் சில.

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. *(82)*

பொருள்: ஒருவன் தான் உண்பது சாவாமைக்குக் காரணமாகிய அமிழ்தமே யானாலும் விருந்தினர் புறத்தே இருக்கத் தான் மட்டும் தனித்து உண்ணல் விரும்பத்தக்கது ஆகாது.

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. *(86)*

பொருள்: இப்பிறவியில் தன்னிடம் வந்த விருந்தினரை உபசரித்து மேலும் வரக்கூடிய விருந்தினரை எதிர்பார்த்திருப்பவன் மறுமையில் தேவனாய் வானுலகில் வாழும் தேவர்க்கு நல்ல விருந்தினர் ஆவான்.

இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. *(81)*

பொருள்: மனைவியோடு வீட்டில் இருந்து பொருள்களைக் காப்பாற்றி வாழும் வாழ்க்கையெல்லாம் வந்த விருந்தினரை உபசரித்து அவர்களுக்கு உபகாரம் செய்வதற்காகத்தான்.

- என்றெல்லாம் விருந்தோம்பலைப் புகழ்ந்து கூறுகிறார்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

- கொல்லாமை அதிகாரம் (322)

பொருள்: கிடைத்ததைப் பகுத்துக் கொடுத்து, தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல், அற நூலோர் தொகுத்துக் கூறிய அறங்கள் எல்லாவற்றுள்ளும் தலையாய அறமாகும்.

அறச் செயல்களிலேயே தலைமையானது நமக்குக் கிடைத்த உணவை பகுத்து உண்டு வாழ்தலேயாம் என்கிறார் தெய்வப் புலவர்.

உண்ணும் போது கவனிக்க வேண்டியவைகளாக நம் முன்னோர்கள் மொழிந்தவை:-

1) தூய்மையான இடத்தில் அமர்ந்து சாப்பிடுதல். ஏதேனும் ஆஸனத்தின் (இருக்கை) மீது அமர்ந்து சாப்பிடுதல் நலம்.

2) பிறர் உபயோகப்படுத்திய தட்டில் சாப்பிடுதல் கூடாது. மேசை கரண்டி உட்பட, இன்னொருவர்

உபயோகப்படுத்திய (அ) பயன்படுத்தும் உணவுப் பாத்திரங்களைப் பயன்படுத்தாமல் இருத்தலே சிறந்தது. வாழை இலையில் சாப்பிடுவது மிகவும் உயர்ந்தது.

3) எல்லா உணவுப் பதார்த்தங்களும் இலையில் / தட்டில் பரிமாறிய பின்னரே சாப்பிடத் துவங்க வேண்டும்.

4) உணவைச் சாப்பிடும் முன் தமிழிலோ ஸம்ஸ்க்ருதத்திலோ உணவுக்கென பிரார்த்தனையை சொன்ன பிறகே சாப்பிட வேண்டும்.

உண்பதற்கு முன் சொல்ல வேண்டிய ப்ரார்த்தனைகள்: (தங்களுக்குத் தெரிந்த உணவு உட்கொள்ள வேண்டிய மந்திரங்களையோ பாடல்களையோ எழுதித் தொகுத்து வைத்துக்கொண்டும் சொல்லலாம்)

அ) அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் இப்புவிமிசை
என்னம் பாலிக்குமாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே

- திருநாவுக்கரசு ஸ்வாமிகள்
தேவாரம் - ஐந்தாம் திருமுறை

பொருள்: தில்லைச் சிற்றம்பல நடராஜப் பெருமானைத் தரிசிக்க உயிர்க்கு அமுதாகிய வீட்டின்பம் கிடைக்கும்; உடலின் வலிமைக்குரிய உணவு கிடைக்கும்; பொன்னுலகமாகிய தேவர் உலக வாழ்வு கிடைக்கும். இவ்வுலகில் கண்டு இன்புறுதற்குரிய திருக்காட்சியைக் கண்டு தரிசித்தவர்களுக்கு யாவும்

கைவரப் பெறும். எம்பிரானை தரிசித்தவர்களுக்கு மீண்டும் இப்பிறவி வாய்க்குமோ?

ஆ) ப்³ரஹ்மார்ப்பணம் ப்³ரஹ்மஹவிர்
ப்³ரஹ்மாக்நௌ ப்³ரஹ்மணா ஹுதம் |
ப்³ரஹ்மைவ தேந க³ந்தவ்யம்
ப்³ரஹ்ம கர்மஸமாதி⁴ நா ||

- பகவத்கீதை, அத்.4, ஶ்லோகம் 24

பொருள்: ப்ரஹ்மமே ஸமர்ப்பிக்கும் செயல்; ப்ரஹ்மமே அளிக்கும் பொருள்; ப்ரஹ்மமான நெருப்பில் ப்ரஹ்மத்தால் அளிக்கப்படுகிறது. ப்ரஹ்மத்திடம் நிலைத்திருப்பவரால், உண்மையாக அந்த ப்ரஹ்மமே அடையப்பட வேண்டும்.

குறிப்பு:- ''ப்ரஹ்மம்'' என்ற ஸம்ஸ்கிருதச் சொல் ''ப்ரம்ஹம்'' என்று உச்சரிக்கப்பட வேண்டும். ''ஸிஹ்ம'' என்பது ''ஸிம்ஹ'' என்று உச்சரிக்கப்படுவது போல, தமிழில் ப்ரம்மம் என்றே எழுதப்பட்டும் உச்சரிக்கப்பட்டும் வருகிறது. 'ப்ரம்மா' என்றால் படைக்கும் தொழிலைச் செய்பவர்; நான்கு தலைகளை உடையவர்; விஷ்ணுவின் நாபிக் கமலத்தின் மீது அமர்ந்திருப்பவர்; கலைமகளின் கணவர். ஆனால் இங்கு குறிக்கப்படும் 'ப்ரம்மம்' என்ற சொல்லுக்குப் 'பரம்பொருள்' என்றே பொருள்.

இ) அன்னபூர்ணே ஸதா³பூர்ணே ஶங்கர ப்ராணவல்லபே⁴ |
ஞான வைராக்³ய ஸித்³த்⁴யர்த²ம் பி⁴க்ஷாம் தே³ஹி ச பார்வதி ||
மாதா ச பார்வதீ தே³வீ பிதா தே³வோ மஹேஶ்வர: |
பாந்த⁴வா: ஶிவ ப⁴க்தாஶ்ச ஸ்வதே³சோ பு⁴வனத்ரயம் ||

- ஸ்ரீ சங்கரரின் அன்னபூர்ணாஷ்டகம்

பொருள்:- அன்னம் நிறைந்தவளே! எப்பொழுதும் பூரணமாக இருப்பவளே, ஹிமவானின் புதல்வியே! பரமசிவனால் தனது உயிர்போல் நேசிக்கப்படுபவளே! ஞானம் வைராக்யம் இவற்றை அடைவதற்காக பிக்ஷை என்னும் உணவைக் கொடுப்பாயாக! எனக்குத் தாயானவள் பார்வதி தேவி, தகப்பன் சிவபெருமான், பந்துக்களோ (உறவினர்கள்) சிவபக்தர்கள், மேலும் மூவுலகமுமே என் தேசம்.

ஈ) ஏகோ விஷ்ணுர் மஹத்^{3} பூ^{4}தம்
ப்ருத^{2}க்^{3}பூ^{4}தான்யனேகஶ: |
த்ரீந் லோகான் வ்யாப்ய பூ^{4}தாத்மா
பு^{4}ங்க்தே விஶ்வ புகவ்யய: ||

பொருள்: பெரும் பொருளாகி ஒன்றேயாகிய விஷ்ணுவே, பல்வேறு விதமாகப் பிரிந்து வெவ்வேறாகி உயிர்களையும் பொருள்களையும் மூன்று உலகங்களையுமே வ்யாபித்து, எல்லாவற்றையும் புசிப்பவராய், அழிவும் மாறுபாடும் இல்லாதவராகி, உயிர்களுக்கும் பொருள்களுக்கும் ஆத்மாவாகி (பூ^{4}தாத்மாவாகி) அனுபவிக்கிறார்.

5) இலையில் இட்ட அன்னத்தை வீணாக்காமல் சாப்பிட வேண்டும். ஆனால் நாமோ நமக்குத் தேவையானதை விட அதிகமாக எடுத்துக் கொண்டு, நம்மால் உண்ண முடியாததை எறிந்து விடுகிறோம். உணவை பிரஸாதமாக உட்கொண்டால், ஒருவராலும் அதைத் தூக்கி எறிய முடியாது. உணவை எறிவது என்பது உணவின் மீதும், அதைக் கொடுக்கும் இறைவனின் மீதும் உள்ள மரியாதைக் குறைவைக் குறிப்பிடுகிறது.

6) உணவைச் சாப்பிடும்போது மௌனமாகச் சாப்பிடுவதே நலம் பயக்கும். கூடுமானவரையில் பேச்சைத் தவிர்ப்பது நல்லது.

7) சாப்பிடும்போது ஒரு மகிழ்ச்சியான மனநிலையுடன் இருப்பது மிகவும் அவசியமாகும். குடும்பத்தில் நம் உறவினர்களுடன் சேர்ந்து அமர்ந்து உணவை உட்கொள்வது நல்லது. இப்படிச் சேர்ந்து உண்பது உறவுகள் பலப்படுவதற்கு உதவுமல்லவா? குடும்பமாகச் சேர்ந்து உணவருந்துவது என்பது வாழ்க்கையில் ஒரு முக்கியமான அன்றாடச் செயலாகும்.

8) உணவருந்தும் இடத்தை விவாத அரங்காகக் குடும்பத்தினர் உபயோகப்படுத்தாமல் இருக்க வேண்டும்.

9) பசிக்காகச் சாப்பிட வேண்டுமே தவிர, ருசிக்காகச் சாப்பிடக் கூடாது. அப்படியானால், சுவையற்ற உணவைத்தான் சாப்பிட வேண்டும் என்று பொருளல்ல. அப்படியிருந்தால் இறைவன் நமக்குச் சுவை அரும்புகளை நாக்கில் அளித்திருக்கமாட்டார். உணவு எது கிடைத்தாலும், அது இறைவனால் கொடுக்கப்பட்டதென்று மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்ளவேண்டும். அதுமட்டுமல்லாது, பசியைப் போக்கத் தேவையான அளவிற்குத்தான் உணவும் சாப்பிடப்படவேண்டும்.

10) வயிற்றின் ஒரு பாதியை (அரை) திடமான உணவாலும், கால்பங்கு நீரினாலும் எஞ்சிய கால் பங்கை காற்றின் தாராளமான ஓட்டத்திற்காகவும் விட்டுவிடவும்.

'மருந்து' என்ற அதிகாரத்தில் வள்ளுவரும் இதனைத் தெளிவுபடக் கூறியுள்ளதை நினைவில் கொள்வோமாக!

அற்றால் அளவறிந்து உண்க அஃதுஉடம்பு
பெற்றான் நெடிது உய்க்குமாறு. *(943)*

மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளி முதலா எண்ணிய மூன்று. *(941)*

11) உணவை அன்னபூரணியாகக் கருதி, வெளியில் விற்கும் உணவுப் பண்டங்களை வாங்கிச் சாப்பிடாமலும், பகிர்ந்து உண்டு சாப்பிடுவதாலும் உணவே மருந்தாகும்; அம் மருந்தே வாழ்வின் விருந்தாகும்.

அம்மா

தாயன்பைப் போலக் கலப்படமே இல்லாத பூரணமான அன்பை இந்த லோகத்தில் வேறெங்குமே காண முடியவில்லை. பிள்ளை எப்படி இருந்தாலும், தன் அன்பை பிரதிபலிக்காவிட்டாலும் கூட, தாயாராகப்பட்டவள் அதைப் பொருட்படுத்தாமல் பூரணமான அன்பைச் செலுத்திக் கொண்டேயிருக்கிறாள். **'பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு'** என்று இதைத்தான் சொல்கிறோம். **'தேவி அபராத க்ஷமாபன ஸ்தோத்திரம்'** என்று அம்பாளிடமே நம் குறைகளைச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொள்கிற ஸ்துதி ஒன்று இருக்கிறது. அதில் 'துஷ்டப்பிள்ளை இருப்பதுண்டு; ஆனால் துஷ்ட அம்மா என்று ஒருத்தி கிடையவே கிடையாது' என்று வருகிறது. பரிபூரணமான அன்பையும் தன்னலமே இல்லாத உழைப்பையும் அம்மா ஒருத்தியிடம் தான் பார்க்க முடிகிறது.

- ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்கள்

6. ஹிந்து பண்பாட்டுப் பாரம்பரியம்
(மண் வாஸனை)

வைகாசி விசாகம்

சாந்த்ரமான அடிப்படையில் சித்திரை மாத அமாவாசைக்கு அடுத்தநாள் ஆரம்பித்து வைகாசி அமாவாசையுடன் முடிவது வைசாக மாதமாகும்.

வைகாசி மாதத்திற்கு 'வைகாசி' என்ற பெயரே விசாக நக்ஷத்ரத்தன்று பௌர்ணமி வருவதால்தான். வைசாக மாதமே வைகாசி மாதமாக வழங்கி வருகிறது.

வைகாசி மாதத்து விசாக நக்ஷத்ரத்தன்று **''ஒரு திருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய''.**

விசாக நக்ஷத்ரத்தில் அவதரித்த காரணத்தால் முருகனுக்கு **'விசாகன்'** என்றும் பெயர் உண்டு.

விசாக நக்ஷத்ரத்தின் அதிபதியாக ப்ருஹஸ்பதி குருவும் தேவதையாக முருகனும் விளங்குகின்றனர்.

கார்த்திகேயன் ஹிந்துக்கள் அனைவராலும் வழிபடப்படும் தெய்வம் என்றாலும் தமிழ் பேசும் ஹிந்துக்கள் அதிக ஈடுபாடு கொண்டு வணங்குகின்றனர். ''குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இட''மாக வழிபடுகின்றனர். ஆறுபடை வீடுகள் முருகனுக்கு உண்டு.

'முருகு' என்றால் **இளமை, அழகு** என்றெல்லாம் பொருள் உண்டு. அழகும் இளமையும் கொண்ட கடவுள் வடிவம் முருகன்.

முருகப் பெருமானின் பன்னிரு கரங்கள் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களையும் ஆறுமுகங்களில் உள்ள பதினெட்டு கண்கள் பதினெட்டு மெய்யெழுத்துக் களையும் அவன் கையில் உள்ள வேல் ஆய்த எழுத்தையும் குறிப்பதாகச் சொல்வார்கள்.

'முருகு' என்ற சொல்லிலேயே வல்லின, இடையின, மெல்லின எழுத்துக்கள் இனத்திற்கு ஒன்றாக இடம் பெற்றிருக்கின்றன.

'கந்தன்' என்றும் நாம் அழைப்போம். 'ஸ்கந்த' என்ற சொல் 'கந்தன்' என்று மாறியுள்ளது என்பர். 'கந்தன்' என்ற சொல்லுக்கே 'பற்றுக்கோடாய் இருப்பவன்' என்று பொருள் கூறுவர்.

வைகாசி விசாக நக்ஷத்திரத்தன்று விரதமிருந்து முருகப் பெருமான் திருக்கோயில் சென்று முருகன் துதிகளைப் பாடி வணங்குதல் வேண்டும்.

புத்தர் சித்தார்த்தனாகப் பிறந்ததும் விசாகத்தில்; புத்தராக பரிணமித்தும் விசாகத்தில்; நிர்வாணம் அடைந்ததும் விசாகத்தில்; அந்த வகையிலும் விசாக நக்ஷத்திரம் சிறப்புப் பெறுகிறது.

நம்மாழ்வார் பிறந்ததும் விசாக நக்ஷத்திரத்தில் தான்.

வைசாக (வைகாசி) ஸ்நானம் என்பது புண்ய காலமாகும். ஸ்ரீமந் நாராயணன் ஸகல தீர்த்தங்களிலும் காலை 8 நாழிகை வரையில் (1 நாழிகை என்பது 24 நிமிடம்) வந்திருப்பதாகவும், அப்போது ஸ்நானம் செய்வோர் ஸகல பாக்கியங்களையும் பெறுவதாகவும் பெரியோர்கள் கூறுவர்.

நரஸிம்ஹ ஜயந்தி விரதம்:

சுக்ல சதுர்த்தசியில் ஹிரண்யனை ஸம்ஹரிக்க ஸாயங்காலத்தில் விஷ்ணு நரனாகவும், ஹிம்ஹமாக (சிங்கமாக)வும் தோன்றினார். அந்த புண்ய தினம் வரும் மாதம் இதுவே.

என்னையே எனக்குக் கொடு

உண்மையான பக்தன் ஒருவன் பரமேஸ்வரனுக்குப் பூஜை செய்ய விரும்புகிறான். உடனேயே அவனுக்கு ஒரு பெரிய ஸந்தேஹம் வந்துவிடுகிறது. ஈஸ்வரனிடமே கேட்கிறான்:

'ஈஸ்வரா, நான் உனக்கு உபசாரம் செய்வதாக நினைத்துப் பூஜை செய்தாலும் உண்மையில் அபசாரம் அல்லவா செய்வதாகத் தோன்றுகிறது? எல்லாமே உனதாக இருக்கும்போது நான் எப்படி பூஜை செய்கிறேன் என்று சொல்வது? சரி பூஜையே வேண்டாம் என்று ப்ரார்த்தனை செய்யப் பார்த்தால், எல்லாம் அறிந்த ஸர்வக்ஞனான உன்னிடம் ப்ரார்த்திப்பதும் அபசாரமாக அல்லவா ஆகிறது? எல்லாமான உன்னிடம் எதைப் ப்ரார்த்திப்பது? எல்லாமான நீயேதான் நானாகவும் ஆகியிருக்கிறாய் என்று தெரியாமல் என்னைக் குறைவுபடுத்திக் கொண்டிருக்கிறேனே. **'இந்தக் குறையை நீக்கு'** என்றே ப்ரார்த்திக்கிறேன். **'என்னையே எனக்குக் கொடு'** என்றே ப்ரார்த்திக்கிறேன்.

- ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்கள்

7. ஹிந்து காலக் கணிதம்

(பஞ்சாங்கம்)

'ஜ்யோதிஷம்' வேதத்தின் கண் எனப் பார்த்தோம். ஜ்யோதிஷத்துக்கு 'நயனம்' என்று பெயர் உண்டு. 'நய' என்றால் 'அழைத்துக் கொண்டு போவது (to lead). கண்ணில்லாதவனை' இன்னொருவர் (கண்ணுள்ளவர்) தானே அழைத்துக்கொண்டு போக வேண்டியிருக்கிறது?

அதனால் கண்தான் அழைத்துப் போகிறவராக (leader) இருக்கின்றார் என்பது தெரிகிறது.

வேத கர்மாக்களைச் செய்வதற்கான காலத்தை நிர்ணயம் செய்து, நம்மை அந்தச் செயலுக்கு அழைத்துக் கொண்டு போகிற கண்ணாக இருப்பது, ஜ்யோதிஷமே.

கண் இல்லாதவன் குருடன். கண் எதற்காக? பக்கத்திலும் தொலைவிலுமாக உள்ள பொருட்களை கண்ணினால் பார்த்தே தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

இடத்திலே தூரத்தில் இருப்பதைத் தெரிந்து கொள்ள நம்முடைய கண் எப்படிப் பயன்படுகிறதோ, அப்படிக் காலத்திலே தூரத்தில் (அதாவது பல ஆண்டுகளுக்கு முன்னால் அல்லது பல ஆண்டுகளுக்குப் பின்னால்) உள்ள க்ரஹ நிலைகளைத் தெரிந்து கொள்ள, ஜ்யோதிஷ ஶாஸ்திரம் தான் உதவி புரிகிறது.

நாரதர், கர்க்கர், பராசரர் எனப்பல ரிஷிகள் பல ஜ்யோதிஷ ஸம்ஹிதைகளைச் செய்திருக்கிறார்கள். ஸூர்ய பகவான், அசுரத் தச்சனாகிய மயனுக்கு

ஜ்யோதிஷ உபதேசம் செய்ததாக ஒரு கிரந்தம் இருக்கிறது. அதற்கு **'ஸூர்ய ஸித்தாந்தம்'** என்று பெயர். இப்படித் தேவர்களும் ரிஷிகளும் இயற்றிய பல ஜ்யோதிஷக் கிரந்தங்கள் உண்டு. மனிதர்கள் செய்த கிரந்தங்களைத் தான் சென்ற மாத பாடத்தில் பார்த்தோம். ஆரிய பட்டர், பாஸ்கராசாரியார், வராஹமிஹிரர் என நம் முன்னோர்கள் செய்ததை நாம் அறிந்தோம்.

ஜ்யோதிஷத்தில் மூன்று ஸ்கந்தங்கள் இருக்கின்றன என்றும் பார்த்தோம். அதனால் ஜ்யோதிஷத்திற்கு **'ஸ்கந்த த்ரயாத்மகம்'** என்று பெயர்.

(**ஸ்கந்தம்** என்றால் மரத்தின் அடிக்கட்டையில் இருந்து பிரிகிற பெரிய கிளைகளுக்குப் பெயர்.)

ஜ்யோதிஷமே கணித சாஸ்திரங்கள்தான்; இவ்வளவு கணித சாஸ்திரங்களும் **நக்ஷத்திரங்கள், ஒன்பது கிரஹங்கள்** என்பவைகளின் கதியைப் பற்றியும் நிலையைப் பற்றியும் சொல்லுபவைகள்தாம்.

கிரஹங்கள் ஏழுதான், ராகு கேதுக்கள் நிழல், அதனால் அவைகளைச் **சாயாக்கிரஹங்கள்** என்றும்

எதை அடைந்த பின் வேறு அடைய வேண்டியது எதுவும் இல்லையோ, எந்த ஆனந்தம் அனுபவிக்கப் பட்டபின் அதற்கு மீறிய ஆனந்தம் வேறொன்று வேண்டப்படுவதில்லையோ, எதையறிந்த பின் வேறு அறிய வேண்டியது எதுவுமில்லையோ அதை பிரம்மம் என்று அறிந்து அனுபவிப்பாயாக.

- **ஸ்ரீ ஆதிசங்கரர்**

சொல்லுவார்கள். ஸூரியனுக்கும் சந்திரனுக்கும் நேர் எதிராக அவை ஓடும்.

கிரஹங்கள்	அவற்றிற்கு உரிய நாள்
1. ஸூரியன் (Sun)	ஞாயிற்றுக் கிழமை (பா⁴னுவாஸரம்)
2. சந்திரன் (Moon)	திங்கட் கிழமை (இந்து³வாஸரம்)
3. செவ்வாய் (Mars)	செவ்வாய்க் கிழமை (பௌ⁴ம வாஸரம்)
4. புதன் (Mercury)	புதன் கிழமை (ஸௌம்ய வாஸரம்)
5. வியாழன் (Jupiter)	வியாழக் கிழமை (கு³ரு வாஸரம்)
6. வெள்ளி (Venus)	வெள்ளிக் கிழமை (ப்⁴ருகு³ வாஸரம்)
7. சனி (Saturn)	சனிக்கிழமை (ஸ்தி²ர வாஸரம்)

கண்ணுக்குத் தெரியும் சுடர்களில் அதிக ஒளி உடையது, ப்ரகாசமுடையது எது என்றால், அது ஸூரியன்; அதற்கு அடுத்தது சந்திரன். சனி எல்லாவற்றிலும் கடைசியாக நிற்கிறது.

இருள் கிரகம் சனி; கருமைநிறம் கொண்டதால் சனிக்குக் **'காரி'** என்ற பெயர் உண்டு; அதைச் சுற்றிலும் கருப்பு வட்டம் உண்டு; சனிக்கு **வாஹனம் காக்கை;** அதுவும் **அண்டங் காக்கை;** ஆடையோ **கருப்பு;** அணிகலனோ **இரும்பு;** தானியமோ **எள்** என எல்லாமே கருப்பு. அதனால்

தான் சனிக்கிழமையை கிழமை வரிசையில் கடைசியாக நம் முன்னோர்கள் அமைத்தார்கள்.

நம் வழக்கப்படி வாரத்தின் துவக்கம் என்பது ஞாயிற்றுக் கிழமையே. ஆனால் பிரிட்டிஷ்காரர்களின் அடிமைத் தனத்திலே அவர்கள் வழக்கப்படியான ஞாயிற்றுக் கிழமையை கடைசியாக வைத்துக் கொண்டதோடு, அவர்கள் மத வழக்கப்படி ஓய்வு நாளாக (holiday)வும் கொண்டது அறிவீனம் அல்லவோ? ஸூரியனுக்கு உரிய நாளான ஞாயிற்றுக் கிழமை நன்கு உழைக்க வேண்டிய நாள். காரணம் ஓய்வின்றி சுழலுபவன் ஸூரியன் தானே!

பெண்கள் எண்ணெய்த் தேய்த்துக் குளித்தலை **வெள்ளிக்கிழமையிலும்** ஆண்கள் எண்ணெய்த் தேய்த்துக் குளித்தலை **சனிக்கிழமையிலும்** வைத்திருப்பதையும் நாம் மனதில் கொள்ளவேண்டும்.

சனியிலும்	ஒளிமிக்கது	வெள்ளி
வெள்ளியிலும்	ஒளிமிக்கது	வியாழன்
வியாழனினும்	ஒளி மிக்கது	புதன்
புதனினும்	ஒளிமிக்கது	செவ்வாய்
செவ்வாயினும்	ஒளிமிக்கது	திங்கள் (சந்திரன்)
திங்களிலும்	ஒளிமிக்கது	ஞாயிறு(ஸூர்யன்)

இந்த அடிப்படையில்தான் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்று வரிசைப்படுத்தி கிழமைகளை நாம் சொல்ல வேண்டும். ஒளியைக் கொண்டுதான் இப்படி வரிசைப்படுத்தப் பெற்றுள்ளது.

ஞாயிற்றுக் கிழமை கிறிஸ்தவர்களுக்கு ஓய்வுநாள். அதனால் தான் ஞாயிற்றுக் கிழமையை (Holiday /

ஹோலிடே/ஹாலிடே) என்கின்றனர். அவர்களின் கொள்கையின் படி இறைவன் படைப்பை முடித்து ஞாயிறு அன்று பூரண ஓய்வு எடுக்கிறார்; ஆகவேதான் அன்றையதினம் எந்த வேலையும் செய்யக் கூடாது என்கின்றனர் கிறிஸ்தவர்கள். அதனால் தான் உலகெங்கும் கிறிஸ்தவர்கள் ஆளும் பகுதிகளிலே ஞாயிறு விடுமுறை உண்டானது. ஓய்வொழிவறியா ஸூரியனுக்குரிய நாளில் பணிசெய்ய வேண்டும் என்பதுதான் நம் பாரதீய கலாச்சாரம்.

ஸூரியனைக் காட்டிலும் ஒளிமிக்கது அக்னி. அக்னிக்கு ஒளியையும் உஷ்ணத்தையும் கொடுப்பது எதுவோ அதுவே அருட்பெருஞ்ஜோதி.

அதனால் தான் நம் ஹிந்து ஸம்ப்ரதாயத்தில் தீபம் (ஒளி) ஏற்றுதல் மிக முக்யமாகக் கருதப்படுகிறது. ஒளியை (அக்னியை) அழித்தல் மேலைநாட்டு அநாசாரம்; ஒளி ஏற்றுதல் நம் பாரதீய கலாச்சாரம்.

பிறந்த நாள் கொண்டாடுபவர்கள் ஒளி ஏற்ற வேண்டுமே தவிர, ஏற்றிய தீபத்தை வாயால் ஊதி அணைப்பது பாவம் என்று நம் தர்ம சாஸ்திரங்கள் சொல்கின்றன.

கண்கண்ட தெய்வமாய் விளங்கும் ஸூர்ய பகவானை மையமாக வைத்துச் சுழலும் க்ரஹங்களின் (கோள்கள்) ஸஞ்சாரத்தில் எப்படி காலக் கணிதமானது கணிக்கப்படுகிறது? பருவங்கள், மாதங்கள் என எப்படியெல்லாம் வகுத்து வைத்திருக்கிறார்கள் எனப் பார்க்கும்போது நமக்கே பிரமிப்பூட்டும் வகையில் ஜ்யோதிஷ சாஸ்திரம் உள்ளது.

8. ஹிந்து மத உபாக்யானம்
(கதைக் கருவூலம்)

இராமாயணம்
பால காண்டம்

ஸூரிய வம்சத்தின் ஸந்ததியான தசரத சக்ரவர்த்தி கோசல நாட்டை அயோத்தியிலிருந்து ஆண்டு வந்தார். அவருக்கு வாரிசாக நாட்டை ஆள ஒரு புதல்வனைத் தவிர, வாழ்க்கையில் ஒருவர் விரும்பக்கூடிய எல்லாவற்றையும் அவர் அடைந்திருந்தார். ஒரு சமயம், அரச சபையில் தசரதர் அஶ்வமேத யாகத்தைச் செய்வதற்காக அவருடைய குருவான வஸிஷ்டருடனும் சில முனிவர்களுடனும் ஆலோசனை செய்தார். அந்த யாகத்தை நடத்துவதற்கு கலைக்கோட்டு முனிவரை (ருஷ்ய ச்ருங்கரை) அழைக்கும்படி மந்திரியான ஸுமந்திரர் யோசனை கூறினார். வஸிஷ்டரும், மற்றவர்களும் அவர் கூறியதற்குச் சம்மதம் தெரிவித்ததால், யாகத்தை அதிகாரப் பூர்வமாக நடத்த, பெரிய முனிவரான ருஷ்ய ச்ருங்கரை முறைப்படி தசரதர் அழைத்தார். எல்லா தேவர்களும், யாகத்தில் அவர்களுக்குரிய பிரஸாதத்தைப் பெறுவதற்காக யாகசாலையில் கூடியிருந்தனர். தக்க தருணமாக இருப்பதைக் கண்ட அவர்கள் எல்லோரும், சக்தி வாய்ந்த அரக்க அரசனான ராவணனால் ஏற்படும் தொல்லைகளிலிருந்து விடுபட, மஹாவிஷ்ணுவைத் துதித்தனர். பகவான் விஷ்ணு அவர்களை ஆசீர்வதித்து, அவர் தசரதரின் மகனாகப் பிறந்து, ராவணனைக் கொல்வதாக அவர்களுக்கு உறுதி அளித்தார்.

அஸ்வமேத யாகம் முடிந்தவுடன், தசரதர், தனக்குக் குழந்தைப் பேறு பெற உதவும் யாகத்தை நடத்தித் தருமாறு ருஷ்யச்ருங்கரை வேண்டிக் கொண்டார். புத்திரன் பிறக்கவேண்டி செய்யும் புத்திர காமேஷ்டி யாகத்தை மாமுனி ருஷ்யச்ருங்கர் நடத்திக் கொடுத்தார். அந்தச் சடங்கு முடிவடையும் தருவாயில், தெய்வீகத் தன்மை பொருந்திய ஒருவன், வேள்விக் குண்டத்திலிருந்து பாயஸம் நிரம்பிய ஒரு தங்கப் பாத்திரத்துடன் தோன்றினான். அவன், அந்தப் பாயஸத்தை மூன்று ராணிகளுக்கும் அளிக்குமாறு தசரதரிடம் கூறினான். தெய்வீகப் புருஷனின் தோற்றத்தைக் கண்டு தசரதர் மகிழ்வுற்று, பாயஸத்தில் பாதிப் பகுதியை கௌஸல்யாவிற்கும், கால் பாகத்தை ஸுமித்ராவுக்கும், எட்டில் ஒரு பாகத்தை இளைய ராணி கைகேயிக்கும், எஞ்சியுள்ள எட்டில் ஒரு பாகத்தை ஸுமித்ராவுக்கு மீண்டும் கொடுத்தார்.

அதற்குப் பிறகு மூன்று ராணிகளும் கருவுற்றார்கள். சித்திரை மாதத்தில், வளர்பிறையில் மங்களகரமான ஒன்பதாவது தின்த்தில் ராணி கௌசல்யா ராமரைப் பெற்றாள். அதற்கு மறுநாள் கைகேயிக்கு பரதன் பிறந்தான். அதற்கும் அடுத்த நாள் ஸுமித்ரா லக்ஷ்மணன், சத்ருக்னன் என்ற இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். அயோத்தி முழுவதும் இளவரசர்கள் பிறந்ததைக் குதூகலத்துடன் கொண்டாடியது. நான்கு சகோதரர்களும் அரச குலத்திற்குத் தகுந்த கல்வியையும், பயிற்சிகளையும் பெற்று வளர்ந்து வந்தனர். அவர்கள் ஒருவரை ஒருவர் நேசித்து, எல்லாவற்றையும் பகிர்ந்து

கொண்டனர். தசரதர் எல்லாப் புதல்வர்களையும் நேசித்தாலும், மூத்த மகனான ராமரிடம் அதிகமான பற்றுதலை வைத்திருந்தார். ராமரும் தன் தந்தையிடம் மிகுந்த பற்றுதல் கொண்டு, ஸமயம் நேரும் போதெல்லாம் அவரை மகிழ்வுறச் செய்தான். பல மகிழ்ச்சியான வருடங்கள், அரண்மனையிலும், அயோத்தியிலும் கழிந்தன.

ஒருநாள், விஶ்வாமித்ர முனிவர் ஓர் அவஸரமான வேலையின் பொருட்டு அரண்மனைக்கு வந்தார். தசரதர் அவரை, மிகுந்த மகிழ்ச்சியுடனும், மரியாதையுடனும் வரவேற்று, அவருக்கு எந்த தேவை இருந்தாலும் அதைப் பூர்த்தி செய்வதாகக் கூறினார். விஶ்வாமித்ரர் மகிழ்ச்சியுற்று, தன்னுடைய வருகைக்கான காரணத்தைக் கூறினார். தன்னுடைய ஆசிரமத்தில் ஒரு யாகத்தைத் தொடங்கியுள்ளதாகவும், இரண்டு சக்தி வாய்ந்த அரக்கர்களின் குறுக்கீட்டினால் அதை முடிக்க முடியாமல் இருப்பதைப் பற்றியும் அவர் தசரதரிடம் சொன்னார். யாகம் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் தன்னால் அரக்கர்களைச் சபிக்க முடியவில்லை; யாகத்தைத் தடையின்றி செய்து முடிப்பதற்கு ராமரைத் தன்னுடன் அனுப்புமாறு தசரதரிடம் வேண்டினார்.

மகனை விட்டுப் பிரிந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தசரதரால் தாங்க முடியாததால், விஶ்வாமித்ரரின் கோரிக்கை தசரதருக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்தது. விஶ்வாமித்ரரின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக வேறு சில மாற்றுக் கருத்துக்களை தசரதர் எடுத்து உரைத்தார். ராமன் ஒருவனால் தான் அந்த

அரக்கர்கள் செய்யும் அக்கிரமங்களை அடக்கமுடியும் என்பதை நன்கறிந்த விஸ்வாமித்ரர் ராமர்தான் தன்னுடன் வரவேண்டுமென்று வற்புறுத்தினார். தசரதர் தன் வாக்கை மீறிச் செல்வதைக் கண்டு விஸ்வாமித்ரர் தன்னுடைய அதிருப்தியைக் காட்டினார். முடிவில் வஸிஷ்ட முனியின் அறிவுரைக்கேற்ப, தசரதர் மிகுந்த தயக்கத்துடன் ராமரை விஸ்வாமித்ரர் அழைத்துச் செல்ல அனுமதித்தார். லக்ஷ்மணனையும் ராமருடன் அனுப்புவதற்குத் தீர்மானித்தார்.

பெற்றோர், பெரியோர்களின் ஆசிகளைப் பெற்று இரண்டு அரச குமாரர்களும் அரண்மனையை விட்டு முனிவருடன் சென்றனர். ஸரயு நதிக்கரையை அடைந்தவுடன், **'பலா' 'அதிபலா'** என்ற இரண்டு ரகஸிய மந்திரங்களை அவர்களுக்கு விஸ்வாமித்ரர் உபதேசித்தார். இந்த மந்திரங்கள் அவர்களுக்கு அதிக சக்தியுள்ள தேக பலத்தையும், பசி, தாகம், பிணி போன்ற துன்பங்களிலிருந்து காப்பாற்றும் விசேஷத் தன்மையையும் அளிக்கும் என்று அவர் ஆசீர்வதித்தார். கங்கை நதியும், ஸரயு நதியும் சந்திக்குமிடத்தில் அமைந்த காமாஸ்ரமத்தில் அவர்கள் இரவைக் கழித்தனர். அந்தப் பயணத்தில் அவர்கள் கடக்க வேண்டிய புனித இடங்களைப் பற்றி முனிவர் கூறி அரசிளங்குமாரர்களை மகிழ்வித்தார்.

மறுநாள் காலையில் கங்கை நதியைக் கடந்த பின் ஒரு அடர்த்தியான வனத்தை அவர்கள் அடைந்தனர். அந்த வனத்தின் அழகையும், ஓரிரு பறவைகளின், பிராணிகளின் ஒலியையும் தவிர நிசப்தமாக இருக்கும்

தன்மையையும் கண்டு ராமர் வியந்தார். தாடகை என்ற பயங்கரமான அரக்கி அந்த வனத்தில் வசித்து வருவதாக விஸ்வாமித்ரர் அவர்களிடம் விவரித்தார். எல்லோரையும் அச்சமுறச் செய்யும் அரக்கி தாடகை, ஆயிரம் யானைகளின் பலத்தை உடையவள்; விருப்பப்படி எந்த வடிவத்தையும் எடுக்கக்கூடிய சக்தியைக் கொண்டவள். எந்தவிதத் தயக்கமுமில்லாமல் அவளைக் கண்டவுடன் கொல்லுமாறு முனிவர் ராமரிடம் கூறினார். விஸ்வாமித்ரர் அவ்வாறு பேசிக் கொண்டிருக்கும் போதே ராமர் வில்லை வளைத்து, நாணை தோள்வரை இழுத்து, ஒலியை எழுப்பினார். அவரது வில்லிலிருந்து எழும்பிய இடி போன்ற ஓசை, அந்த வனம் முழுவதிலும் எதிரொலித்தது. உரிமையின்றி உள்ளே நுழைந்தவனின் துணிச்சலைக் கண்டு, ஒலி எழுந்த திசையை நோக்கி தாடகை விரைந்தாள். ராமருக்கும் தாடகைக்கும் இடையே பயங்கரமான போர் மூண்டது. இரவு வளர வளர அரக்கி மேன்மேலும் பலம் அடைவாள்; அதனால் தாமதிக்காமல் அவளைக் கொன்று விடுமாறு விஸ்வாமித்ரர் ராமனை எச்சரித்தார். மரணத்தை விளைவிக்கின்ற அம்பு ஒன்றை எய்து ராமர் அந்த அரக்கியைக் கொன்றார்.

ராமருடைய பராக்கிரமத்தைக் கண்டு விஸ்வாமித்ரர் மனமகிழ்ந்தார். அவருடைய நன்றியைத் தெரிவிப்பதற்காகத் தன்வசமுள்ள, தெய்வீகமான திவ்யாஸ்திரங்களைப் பற்றிய அறிவை ராமருக்கு உபதேசித்தார். அந்த அஸ்திரங்களை வரவழைப்பது, ஏவுவது, மறுபடியும் ஏவியவற்றை அழைப்பது போன்றவற்றுக்கான முறைகளையும் அவர் ராமருக்குச் சொல்லிக் கொடுத்தார். அந்த அஸ்திரங்களுக்குரிய எல்லா தேவர்களும் தோன்றி

ராமரை ஆசீர்வதித்தார்கள். அதற்குப் பிறகு ராமர் அவற்றை லக்ஷ்மணனுக்குக் கற்பித்தார்.

கரடுமுரடான நிலப்பகுதிகளில் பயணம் செய்து கடைசியாக அவர்கள் சித்தாஶ்ரமத்தின் அண்மையில் வந்தார்கள். அவர்கள் நடந்து செல்லும் போது ராமர் அந்த ஆசிரமத்தை பற்றி வினவினார். இந்த இடத்தில் தான் கஶ்யப முனிவர் தவம் செய்து மஹாவிஷ்ணுவை, வாமனன் என்ற மகனாக அடைந்தார் என்று விஶ்வாமித்ரர் பதில் அளித்தார். பிறகு அவர் மஹாபலியின் கதையைக் கூறினார். மேலும், சித்தாஶ்ரமம் தன்னுடைய இருப்பிடம் என்றும், தான் இந்த இடத்தில்தான் யாகம் செய்து கொண்டிருப்பதாகவும் விஶ்வாமித்ரர் கூறினார்.

ஆஶ்ரமத்தை அடைந்தபிறகு, அவர் யாகத்தைப் பற்றியும், ஸுபாகு, மாரீசன் என்ற அரக்கர்களைப் பற்றியும் ராம, லக்ஷ்மணனுக்கு எடுத்துச் சொன்னார். ஆறு நாட்களுக்கு யாகம் தொடர்ந்து நடக்கும் என்றும் அந்த சமயத்தில் அவர் மௌனத்தைக் கடைப்பிடிப்பார் என்றும் விஶ்வாமித்ரர் கூறினார். மேலும் ஒவ்வொரு நாளும் இருபத்தி நான்கு மணி நேரமும் விழிப்புடன் இருக்க வேண்டுமென்றும் அவர்களிடம் கேட்டுக் கொண்டார். கடைசி தினமான ஆறாவது நாளில், இரண்டு அரக்கர்களும், யாகம் நடக்கும் இடத்தின் புனிதத் தன்மையைக் கெடுக்கவும், யாகத்தைத் தடுக்கவும் எண்ணங்கொண்டு அங்கு தோன்றினார்கள். அவர்களுடைய நடத்தையைக் கண்டு கோபமுற்று, ராமர் மானவாஸ்திரத்தை எடுத்து மாரீசன் மீது ஏவினார்; அந்த அஸ்திரம் அவனைத் தாக்கி வெகு தூரத்திற்கு அப்பால்

தூக்கிச் சென்று, அவனைக் கடலில் எறிந்து விட்டது. பிறகு ஆக்னேயாஸ்திரத்தின் உதவியால் ராமர், ஸுபாகுவை அந்த இடத்திலேயே கொன்றுவிட்டார். இவ்வாறாக, அரக்கர்களின் இடையூறு இல்லாமல், விஸ்வாமித்ரர் யாகத்தை முடித்தார்.

விஸ்வாமித்ரர், அரசிளங்குமாரர்களின் உதவியினால் மனமகிழ்ந்து, மிதிலையில் மறுநாள் ஜனக சக்ரவர்த்தி செய்யும் யாகத்திற்கு அவர்களை அழைத்துப் போவதாக ராமரிடம் கூறினார். ஜனகரின் சபையில் இருப்பதும், ஒருவராலும் தூக்க முடியாததும், புராதனமானதுமான சிவபெருமானின் பெரிய வில்லை ராமர் பார்க்க வேண்டும் என்று விஸ்வாமித்ரர் விரும்பினார்.

ராமர் ஒருபக்கமும், லக்ஷ்மணன் ஒரு பக்கமுமாக வர விஸ்வாமித்ரர் மற்ற ஆஸ்ரம முனிவர்களுடன் மிதிலைக்குச் சென்றார். கங்கைக் கரையை அந்தக் குழு அடைந்தவுடன், முருகக் கடவுளின் பிறப்பையும், கங்கை தோன்றிய வரலாற்றையும் சொல்லுமாறு ராமர் விஸ்வாமித்ரரைக் கேட்டார். விஸ்வாமித்ரரும் அந்தக் கதைகளைக் கூறினார். கங்கையின் வடக்கு தீரத்தில் விசாலா நகரத்தை அவர்களால் காண முடிந்தது. தேவர்களும், அசுரர்களும் சமுத்திரத்தைக் கடைந்ததி லிருந்து ஆரம்பித்து விசால நாட்டின் வரலாற்றை விஸ்வாமித்ரர் ராமருக்குக் கூறினார். அன்று இரவு விசால நாட்டில் அரசர் ஸுமதியின் விருந்தினர்களாக தங்கி மறுநாள் மிதிலைக்குப் புறப்பட்டார்கள்.

மிதிலையின் எல்லைப்புறத்தில் ஓர் அழகான ஆஸ்ரமத்தை ராமர் கண்டார். ஆனால் பராமரிப்பவர்

இல்லாமல் கைவிடப்பட்டதாக அந்த ஆஃஸ்ரமம் காணப்பட்டது. விஃஸ்வாமித்ரர், அது கௌதம முனிவரின் ஆஃஸ்ரமம் என்று கூறி அந்த இடத்தைப்பற்றிக் கூறினார். ஒரு சமயம், இந்திரன், கௌதம முனிவரின் மனைவியின் அழகினால் மயங்கி, முனிவர் வெளியில் சென்றிருக்கும் போது, கௌதமர் மாதிரியே தன் தோற்றத்தை மாற்றிக் கொண்டு, அவளை அணுகினான். திரும்பி வந்த கௌதம முனிவர், அவசரமாக ஓடிக் கொண்டிருக்கும் இந்திரனைப் பார்த்து விட்டதால், இந்திரன் ஆண் தன்மையை இழக்கட்டும் என்று சாபமிட்டார். அஹல்யாவையும், ராமர் அந்த ஆஃஸ்ரமத்திற்கு வரும்வரை கண்ணுக்குத் தெரியாமல், காற்றில் வாழ்ந்து வருபவளாகப் போகட்டும் என்று கௌதமர் சபித்துவிட்டார்.

விஃஸ்வாமித்ரரின் விருப்பப்படி ராமரும், லக்ஷ்மணனும் ஆஃஸ்ரமத்தை அடைந்தனர். அஹல்யாவை அவள் கணவனின் சாபத்திலிருந்து ராமர் விடுவித்தார். கௌதமரையும், அஹல்யாவையும் ஆசீர்வதித்து விட்டு அவர்கள் மிதிலைக்குச் சென்றார்கள். மதிப்புடனும், மரியாதையுடனும், ஜனக சக்ரவர்த்தியால் விஃஸ்வாமித்ரர் வரவேற்கப்பட்டார். ஜனகருடைய ஆசான், ஸதானந்தர் உயர்ந்த முனிவரான விஃஸ்வாமித்ரரைப் புகழ்ந்து, அவருடைய வாழ்க்கைக் கதையை ராமர், லக்ஷ்மணன் இருவரிடமும் கூறினார்.

விஃஸ்வாமித்ரர் துறவறம் மேற்கொள்ளுமுன், ஒரு சிறந்த அரசராக இருந்தார். ஒரு முறை அவர் ஸேனைகளோடு வெளியே சென்றபோது வஸிஷ்டமுனிவர் அவர்களை உபசரித்து, உடனடியாக

அந்தப் பெரிய சேனை முழுவதற்கும் முதல்தரமான விருந்தையளித்தார். எவ்வாறு முனிவரால் இவ்வாறு உணவளிக்க முடிந்தது? என்று விஶ்வாமித்ரர் வியந்து, முனிவரிடமும் அது குறித்து வினவினார். வஸிஷ்டர், தன்னிடம் விலைமதிப்பற்றதுமான, சிறப்பானதுமான பசு ஒன்று இருக்கிறது என்றும், அதன் பெயர் ஸபலா என்றும், அது எல்லாவித இச்சைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய சக்தியுடையது என்றும் தெரிவித்தார். விஶ்வாமித்ரர், அந்தப் பசு, முனிவரை விட ஓர் அரசனுக்கு மிகப் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதியதால், அதைத் தனக்கு அளித்து விடுமாறு முனிவரிடம் அதிகாரத்துடன் கேட்டார். வஸிஷ்டர் அந்தப் பசுவை விட்டுப் பிரிய மறுத்துவிட்டார். தன்னுடைய வேண்டுதலுக்கு இணங்க மறுத்த வஸிஷ்டரின் மேல் கோபமுற்று, அந்தப் பசுவை வன்முறையில் எடுத்துச் செல்லுமாறு விஶ்வாமித்ரர் தன் வீரர்களுக்கு ஆணையிட்டார். அவர்கள் ஸபலாவைச் சிறைப்படுத்தியதும், வஸிஷ்டரால் மீட்கமுடியாமல் கைவிடப்பட்ட நிலை, அவளை மனமுடையச் செய்தது. விரைவாக அவள் தன்னை வலுச்சண்டைக்காரர்களிட மிருந்து விடுவித்துக் கொண்டு வஸிஷ்டரிடம் விரைந் தாள். வஸிஷ்டர் அவளுக்கு ஆறுதல் அளித்து, எதிரிகளுடன் சண்டையிடுவதற்காக ஒரு சேனையைத்

பக்தியும் நானே, பூஜையும் நானே; மோட்சமும் நானே, மோட்சத்திற்கான வழியும் நானே. அனைத்து உயிர்களையும் ஆள்பவன் நானே. சென்றது இருப்பது வருவது என்ற அனைத்திற்கும் மூலகாரணம் நானே.

- ஸ்ரீ ஆதிசங்கரர்

திரட்ட அனுமதி அளித்தார். ஸபலாவால் படைக்கப் பட்டதும், களைப்படையாததும், மிகுந்த பலத்துடன் கூடியதுமான ஒரு ஸேனையால் தோற்கடிக்கப்பட்டு விஶ்வாமித்ரர் அவமரியாதையுடன் தன் நாட்டுக்குத் திரும்பினார்.

வஸிஷ்டரை அடக்கத் தீர்மானித்து விஶ்வாமித்ரர் தன்னுடைய நாட்டை மகனிடம் கொடுத்துவிட்டு தவம் செய்ய ஹிமாலயத்திற்குச் சென்றார். அவருடைய கடுமையான தவத்தைக் கண்டு சிவபெருமான் மகிழ்ந்து விஶ்வாமித்ரருக்கு அவர் விரும்பிய தெய்வீக அஸ்திரங்களைக் கொடுத்து, அவற்றில் மிகுந்த திறமையை அடையவும் உதவி செய்தார். புதிதாக அடைந்த பலத்தினால் ஏற்பட்ட கர்வத்துடன் விஶ்வாமித்ரர் வஸிஷ்டரின் ஆசிரமத்தை விரைந்தடைந்து, தன்னுடைய அஸ்திரங்களை எல்லாம் வஸிஷ்டர் மீது பிரயோகித்தார். என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொண்ட வஸிஷ்டர், அமைதியாகத் தன்னுடைய புனித பிரம்ம தண்டத்தை அவருக்கு முன்னால் வைத்தார். அந்தப் புனித தண்டம் துறவறத்தின் சக்திக்கு அடையாளமாக, ஆயுதங்களின் சக்திக்கு எதிராக இருந்து, விஶ்வாமித்ரர் ஏவிய அத்துனை அஸ்திரங்களையும் உட்கொண்டு விட்டது. வஸிஷ்டரின் துறவறத் தன்மையின் சக்தியைப் பார்த்து வியந்து, விஶ்வாமித்ரர் தன் தோல்வியை ஒப்புக் கொண்டு, வஸிஷ்டரைப் போன்ற நிலையில், தான் இருக்க 'ப்ரஹ்மரிஷி' என்ற பட்டத்தை அடைவதற்குத் தீர்மானம் செய்து கொண்டு இந்த முறை ஹிமாலயத்திற்குத் திரும்பினார்.

விஸ்வாமித்ரர் ஆயிரக்கணக்கான வருடங்கள், கடுமையான தவத்தை மேற்கொண்டார். இடையிலுள்ள ரிஷி, மஹரிஷி என்ற பதவி நிலைகளில் அவர் திருப்தி அடையவில்லை. கோபத்திற்கும், ஆழ்ந்த உணர்ச்சிகளுக்கும் வசப்படாமல் இருக்கும் நிலையை அவர் அடைந்ததும் வஸிஷ்டரால் 'ப்ரஹ்மரிஷி' என்ற நிலைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டார். ஸதானந்தர், விஸ்வாமித்ரரை இவ்வாறு புகழ்ந்து, மாமுனிவர் விஸ்வாமித்ரரின் கவனிப்பையும் வழிகாட்டுதலையும் ராமர், லக்ஷ்மணன் இருவரும் பெறத்தக்க ஒன்றாகக் கருதியதற்கு அவர்களைப் பாராட்டினார். ஜனகர், யாகத்தின் கடைசி நாளில் அவர்களை யாகசாலைக்கு அழைத்துச் சென்றார். ஜனகரிடம், இளவரசர்களின் ஆற்றலையும் சாதனைகளையும் விஸ்வாமித்ரர் சொல்லி, புகழ்பெற்ற ருத்திர வில்லை அவர்கள் பார்க்கவேண்டுமென்ற தனது ஆவலையும் வெளியிட்டார். சக்ரவர்த்தி ஜனகர் மகிழ்ச்சியுற்று, சிவபெருமானின் வில்லை உடைக்கிறவருக்குத் தன் மகள் ஸீதையைத் திருமணம் செய்து கொடுப்பதாக இருப்பதைப்பற்றி அவர்களிடம் கூறினார். விஸ்வாமித்ரரின் தூண்டுதலினால் ராமர் அந்த வில்லைப்பார்த்து வெகு எளிதாகப் பெட்டியிலிருந்து தூக்கி, வளைத்து , நாணைப்பூட்டி, பிறகு நாணைப் பின்னால் பிடித்து இழுத்தார். உரத்த ஒலியுடன் அந்த வில் இரண்டாக உடைந்து, ஜனகரின் உள்ளத்தையும், அந்தச் சபையில் கூடியிருந்த ஒவ்வொருவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. ஜனக சக்ரவர்த்தி சிறப்பான தூதுவர்கள் மூலம் அயோத்திக்கு அழைப்பிதழ் அனுப்பினார். தசரதர், குடும்பத்துடன், நண்பர்கள், மந்திரிகள், ஆசான்கள்,

குருமார்கள் எல்லோருடனும் மிதிலையை அடைந்தார். பல மாமுனிவர்களின் முன்னிலையில், அக்னி சாட்சியுடன் ராமர் சீதையை மணம் புரிந்தார். லக்ஷ்மணன் ஸீதையின் சகோதரியான ஊர்மிளையை மணம் புரிந்தான். ஜனக சக்ரவர்த்தியின் சகோதரரான குசத்வஜன் என்ற அரசரின் மகள்களான மாண்டவீ, ஷ்ருதகீர்த்தியை பரதனும், சத்ருக்னனும் முறையே மணம் புரிந்தனர்.

புதிய மணமக்கள், தசரதருடனும் மற்றவர்களுடனும் அயோத்திக்குத் திரும்பினர். அயோத்தியின் குடிமக்கள் அவர்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். ராமரும், ஸீதையும் அவர்கள் சகோதரர்களுடனும், அவர்தம் மனைவிகளுடனும் பல வருடங்கள் ஆனந்தமாக வாழ்ந்தனர். தசரதருக்கும் அயோத்தியின் மக்களுக்கும் ராமர் ஸேவை புரிந்து வந்தார். எல்லோரும் அவருடைய இயல்பையும், நடத்தையையும் கண்டு மகிழ்வடைந்தனர்.

● பகலும் இரவும் மாலையும் காலையும் பனிக்காலமும் இளவேனிற்காலமும் திரும்பித் திரும்பி வந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறு காலம் விளையாடுகிறது; வயது கழிகிறது. என்றாலும் காற்றுபோல் வியாபித் திருக்கும் ஆசை மட்டும் மனிதனை விடுவதில்லை.

● பகவத்கீதையைச் சிறிதாவது படிப்பவன், கங்கை நீரை ஒரு துளியாவது பருகியவன், பகவானுடைய பூஜையை ஒரு தடவையாவது செய்தவன்- அவனுக்கு எம பயமில்லை.

- ஸ்ரீ ஆதிசங்கரர்

9. மந்திரங் கற்போம்

ப்ராதஸ்மரணம்

(வைகறை வணக்கம்)

பூமி வந்தனம்

க^{1}ராக்^{3}ரே வஸதே^{1} லக்ஷ்மீ : க^{1}ரமத்^{4}யே ஸரஸ்வதீ^{1} |
க^{1}ரமூலே ஸ்தி^{1}தா^{1} கௌ^{3}ரீ : ப்^{1}ரபா^{4}தே^{1} க^{1}ரத^{3}ர்ஶனம் ||

என்ற ஶ்லோகத்தைச் சொல்லி கரதர்ஶனம் செய்தபின் பூமியைப் ப்ரார்த்தனை செய்து சொல்ல வேண்டிய ஶ்லோகம். பின்னரே பூமியில் கால்களைப் பதிக்க வேண்டும்.

ஸமுத்^{3}ர வஸநே தே^{3}வி பர்வத^{1}ஸ்த^{1}ந மண்ட^{3}லே |
விஷ்ணு பத்^{1}நி நமஸ்து^{1}ப்^{4}யம் பாத^{3}ஸ்பர்ஶம் க்ஷமஸ்வ மே ||

பதவுரை:

ஸமுத்^{3}ர வஸநே	- ஸமுத்திரத்தில் வஸிப்பவளே
தே^{3}வி	- பேரொளியுடையவளே
பர்வதஸ்த^{2}ந மண்ட^{3}லே	- மலையைப் போன்ற திரண்ட கொங்கை கொண்டவளே
விஷ்ணுபத்நி	- மஹாவிஷ்ணுவின் மனைவியே
துப்^{4}யம்	- உனக்கு
நம:	- நமஸ்காரம்
பாத^{3}ஸ்பர்ஶம்	- பாதங்களால் தொடுவதற்கு (உன்னை என்னுடைய காலால் மிதிப்பதை)
மே	- என்னை
க்ஷமஸ்வ	- பொறுத்தருளுவாயாக

பொருள்:

'ஸமுத்திரத்தில் வஸிப்பவளே, பேரொளியுடையவளே, மலையைப் போன்ற திரண்ட கொங்கை கொண்டவளே, மஹாவிஷ்ணுவின் மனைவியே, உனக்கு என்னுடைய நமஸ்காரம்; எனது கால்கள் உன்னை மிதிப்பதற்காக என்னைப் பொறுத்தருள்வாயாக.

விடியற்காலையில் கரதர்ஶனம் செய்த பிறகு, முதல்முறையாக பூமிதேவியின் மீது ஒருவர் கால்களை வைக்கும்போது இப்பிரார்த்தனை செய்யப்படுகிறது. நம் வேத நெறியில் நாம் வசிக்கும் இந்த பூமியானது ஶ்ருஷ்டியின் ஐம்பூதங்களில் ஒன்றாக மட்டுமே கருதப்படாமல், பூமித்தாயாகவே பார்க்கப்படுகிறாள். ஆகையால் கால்களை அவள் மீது வைப்பது ஒரு மரியாதைக்குறைவான செயலாக நோக்கப்படுகிறது. பூமா தேவியிடம் மன்னிப்பை நாம் ப்ரார்த்திப்பதன் மூலம் நம்மைச் சுற்றியிருக்கும் தெய்வீகத் தன்மையை உணர்ந்து மதிக்கிறோம்.

'கடலையே உடுத்தும் ஆடையாகக் கொண்டவளும் மலைகளைத் தன் மார்பகங்களாகக் கொண்டவளும் பகவான் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அன்புக்குரிய மனைவியுமான ஹே பூமித்தாயே, நான் உன்னை நமஸ்கரிக்கிறேன்' என்று பூமியன்னை வர்ணிக்கப்படுகிறாள்.

'நீராரும் கடலுடுத்த நிலமடந்தை...' என்று தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலின் சிந்தனையும் இவ்வடிப்படையில் பிறந்ததேயாம்.

10. கேள்வி ஞானம்

1. சிறந்த ஞானியாக உபநிஷதத்தில் வர்ணிக்கப்படும் இரண்டு பெண்மணிகள் யார்?
2. யோக ஸூத்ரத்தை எழுதியவர் யார்?
3. எந்த திதியன்று சந்திரனைப் பார்க்கக்கூடாது?
4. பஞ்ச கன்னிகைகள் யார் யார்?
5. மஹாபாரதத்தை இயற்றியவர் யார்?
6. முருகப்பெருமான் அவதரித்த (உதித்த) மாதம், நக்ஷத்திரம் என்ன?
7. கங்கையை பூமிக்கு வரவழைத்த பகீரதனின் தந்தை பெயர் என்ன?
8. சாப்பிடும்போது குடிக்கும் நீரை எங்கு வைத்துக் கொள்ள வேண்டும்?
9. ஸ்ரீமத் ராமானுஜாசாரியாரின் தந்தை, தாயார் பெயர் என்ன?
10. வைசாக மாதம் என்பது எந்த நாள் முதல் எந்த நாள் வரையில்?

விடைகள்:-

1. மைத்ரேயி, கார்கி
2. பதஞ்சலி மஹர்ஷி
3. சுக்லபக்ஷ சதுர்த்தி
4. (1) அஹல்யா(2) த்ரௌபதீ (3) தாரா (4) ஸீதை (5) மந்தோதரீ (மண்டோதரீ)
5. க்ருஷ்ண த்வைபாயனர் என்னும் வேதவ்யாஸர்

6. வைகாசி மாதம் விசாக நக்ஷத்திரத்தில் அவதரித்தார். (ஒரு திருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய)
7. ஸூர்ய வம்சத்தில் பிறந்த திலீபமஹாராஜன்.
8. சாப்பிடும் நபருக்கு வலதுபுறம் நீர்ப் பாத்திரத்தை வைத்துக் கொள்ள வேண்டும்.
9. தந்தை ஸ்ரீகேசவ ஸோமயாஜுலு, தாயார் காந்திமதி அம்மாள்.
10. சித்திரை அமாவாஸைக்கு மறுநாள் முதல் வைகாசி அமாவாஸை வரை.

● அம்மா! மந்திரமோ, தந்திரமோ, ஸ்தோத்திரமோ நான் அறியேன். ஆவாஹனமோ தியானமோ செய்ய அறியேன். உன்னுடைய புகழைப்பாடவும் அறியேன். உனது பூஜா முத்திரைகளை அறியேன். அழக்கூட எனக்குத் தெரியாது. ஆனால் உன்னை வந்தடைந்தால் அது துன்பத்தையெல்லாம் போக்கும் என்ற ஒன்று தெரியும்.

● சிவபெருமானே! கைகளாலோ, கால்களாலோ, காதுகளாலோ, உடலாலோ, செயலாலோ, மனத்தாலோ, என்னென்ன பிழைகள் செய்துள்ளேனோ, செய்யத்தக்கதை விட்டதாயினும், தகாததைச் செய்ததாயினும் அவற்றையெல்லாம் பொறுத்தருள் வாயாக. கருணைக் கடலே! மகாதேவா! சம்போ! உன் நாமம் வெல்க.

– ஸ்ரீ ஆதிசங்கரர்

'ஹிந்து தர்ம ஞானம்' பாடத்திட்டத்திற்குத் துணைநிற்கும் நூல்கள்

1. வேத பாரம்பர்ய கல்வித் திட்டம் தொகுப்பு - 1, 2, 3 பூஜ்ய ஸ்ரீ தயாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளின் ஆர்ஷ வித்யா குருகுலம் அருளாசியுடன் ஸ்வாமிணி ப்ரமாநந்த
2. 'தெய்வத்தின் குரல்' பூஜ்ய ஸ்ரீ சந்த்ரசேகரேந்திர ஸ்வாமிகள் (காஞ்சி மஹா பெரியவர்கள்)
3. சிருங்கேரி மஹாஸ்வாமிகள் உரைத் தொகுப்பு.
4. ஸ்ரீ குருஜியின் 'சிந்தனைக் களஞ்சியம்'
5. கடவுளின் வடிவங்கள் - பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி சித்பவாநந்தர்.
6. சந்தேகம் தெளிதல் - பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி சித்பவாநந்தர்.
7. இராமாயணம் - பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி சித்பவாநந்தர்.
8. மஹாபாரதம் - பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி சித்பவாநந்தர்.
9. ஆன்மிக வினா-விடை - ஸ்வாமி கமலாத்மானந்தா - ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
10. திருக்குறள் கடவுள் வாழ்த்து - ஸ்ரீ ஸ்வாமி ஓங்காராநந்த
11. தர்மத்தின் குரல் பூஜ்யஸ்ரீ பரமாநந்த பாரதி ஸ்வாமிகள்
12. ஹிந்து மதத்தின் மையக் கருத்து - ஸ்வாமி பாஸ்கரானந்தர்
13. 'மதுர முரளி' ஸ்ரீஸ்ரீ முரளிதர ஸ்வாமிகளின் உபன்யாஸ தொகுப்புகள்

14. 'ஹிந்து மஹா சமுத்திரம்' - சோ
15. சிறுவர் சிவஞானம் - கோவை கிழார்
16. ஹிந்து விழாக்களும் விரதங்களும் - ஆர்.பி.வி.எஸ். மணியன்
17. புண்ணியபூமி பாரதம் - ஆர்.பி.வி.எஸ். மணியன்
18. பாரதப் பண்பாடு - கேந்திரத் தொண்டர் 'அண்ணாஜி' விவேகானந்த கேந்திர வெளியீடு
19. வேதமும் பண்பாடும் - ஸ்ரீ சர்மா சாஸ்திரிகள்
20. பாரதீய பண்பாட்டுப் பாடநூல் - வித்யா பாரதி வெளியீடு (9 புத்தகங்கள்)
21. 'ஸந்தேஹ நிவாரணீ' வைதிகஸ்ரீ நன்னிலம் ப்ரம்மஸ்ரீ ராஜகோபால கனபாடிகள் (பாகம் 1-5 வரை)
22. இந்தியக் கலாச்சாரத்தில் ஏன்... எதற்காக? செண்ட்ரல் சின்மயா மிஷன் - ஸ்வாமிநீ விமலானந்த, ராதிகா கிருஷ்ணகுமார்
23. ஹிந்து தர்ம வாழ்க்கையும் தத்துவங்களும் - ஸ்வாமி - அநுராகம் பதிப்பகம்
24. அர்த்தமுள்ள ஸம்ப்ரதாயங்கள் - அருண்ஜி
25. மனோமயகோசம்- ஸ்ரீ ராம கோபாலரத்னம்
26. ஹிந்து சமயம் (ஐந்து நிலைகளும்) - பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி மதுரானந்தர். வெள்ளிமலை ஆஸ்ரமம், கன்னியாகுமரி.

ஹிந்துவாய் வாழ்வோம்!

காப்போம் ஹிந்துஸ்தானமிதை!

தர்ம ரக்ஷண ஸமிதிக்காக
மாதவமுத்ராவில் அச்சிட்டு வெளியிடுவோர்
K.பிரபாகர்,
64, போலீஸ் கமிஷனர் ஆபீஸ் ரோடு,
எழும்பூர், சென்னை-600 008.
போன்:044-2819 2438